ஹிஜ்ரி 1438 ஜ.அவ்வல் பிறை 30 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 034

2017 பெப்ரவரி 28
செவ்வாய்
விலை: 20/-

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY
நவமணி தினபதா

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



மருத்துவ பீட நுழைவை இலகுபடுத்திய பதியுதீன் மஹ்மூதின் நடவடிக்கை 07»






04» வர்த்தமானி அறிவித்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் கையொப்பம் எப்படி வந்தது?

## பாதாள குழுத் தலைவரை இலக்கு வைத்து

# சிறைச்சாலை பஸ் மீது துப்பாக்கிச் சூடு

### 7 பேர் பலி; மூவர் படுகாயம்

■ அ. அருண் பிரசாந்த்
■ பீ.ஏ. முக்தார், பேருவளை

களுத்துறை, எத்தனமடல்ல பகுதியில் சிறைச்சாலை பஸ் மீது நேற்றைய தினம் இடம்பெற்ற மிலேச்சத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தால் 7 பேர் பலியாகினர்.

பாதாளக்குழுவின் தலைவர் எனக் கூறப்படும் அருண தமித உதயங்க பதிரண எனப்படும் சமயங் என்பவரை இலக்குவைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலில் இரண்டு சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் மற்றும் இலக்குதாரி உள்ளிட்ட 5 கைதிகளே பலியாகினர்.

களுத்துறை சிறைச் சாலையிலிருந்து

11 »»»»







## இந்தோனேஷியா செல்லும் ஜனாதிபதி

■ அ. அருண் பிரசாந்த்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மார்ச் மாதம் இந்தோனேஷியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

11 »»»»

## வக்பு சபைக்கு புதிய அங்கத்தவர்கள்

வக்பு சபைக்கு விரைவில் புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்படும் என தபால் தபால் சேவைகள் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தெரிவித்தார்.

11 »»»»

## முஸ்லிம் ஊடகங்களை வளர்ப்பது சமூக இருப்புக்கான உத்தரவாதம்

அஷ்ஷெய்க் நௌபர் (கபூரி)



■ எம்.எஸ்.எம். ஸாகிர்

முஸ்லிம் ஊடகங்களையும் முஸ்லிம் ஊடகவியலாளர்களையும் வளர்ப்பது சமூகத்தின் இருப்புக்கான அடையாளமாகும்.

முஸ்லிம் ஊடகத்துக்கும்,

11 »»»»

## புதிய பிரதம நீதியரசர் யார்? ஜனாதிபதியின் முடிவு விரைவில்

■ அ. அருண் பிரசாந்த்

பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் இன்றுடன் ஓய்வுபெறவுள்ள நிலையில், புதிய நீதியரசரைத் தெரிவு செய்யும் பணிகள் நேற்று இரவு இடம்பெற்றன.

இதற்காக, சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நேற்று இரவு கூடிய அரசமைப்புச் சபைக் கூட்டத்தில் புதிய நீதியரசருக்கான பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டு தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம்

11 »»»»

## லெபனான் வாழ் இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க இணக்கம்

■ பா.மலரம்பிகை

லெபனான் நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க அவ்வரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் வழிகாட்டலுக்கு

11 »»»»

## வடக்கு முஸ்லிம்களுக்காக பேசும் சிங்களவர்களை பாராட்ட வேண்டும்



■ சுஐப். எம் காசிம்

வில்பத்து சரணாலயத்தை முஸ்லிம்கள் நாசமாக்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு மத்தியிலேயே இதன் உண்மை நிலையையும் நமது மக்களின் வாழ்க்கை கஷ்டங்களையும் வெளிக் கொணரும் மனித நேயம் கொண்ட

11 »»»»

## 90 சத வீதமான பெண்களுக்கு பயணத்தில் பாலியல் தொல்லை

■ ஆதில் அலி சப்ரி

இலங்கையில் பொதுப் போக்குவரத்து பஸ் வண்டிகள் மற்றும் புகையிரதங்களில் பயணிக்கும் 90 சதவீதமான பெண்களும் சிறுமிகளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுவதாகவும், அவர்களில் 4 சதவீதமானோரே பொலிஸ் உதவியை நாடுவதாகவும்

11 »»»»



இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சிப்பட்டறை நேற்றைய தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களைக் காணலாம்.

## நிலைமாற்று நீதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம், சிங்களவர்களையும் கவனிக்க வேண்டும்

■ ஆதில் அலி சப்ரி

மூன்று தசாப்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களின் விடயங்கள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் மனித உரிமைகள் மற்றும் ஆய்வுக்கான மத்திய நிலையம்

11 »»»»

## ஜிஹாத் குறித்த உண்மைகளை விளக்க உலமாக்கள் தயங்கக் கூடாது

■ பிறவ்ஸ் முஹம்மட்

ஜிஹாத் மற்றும் காபிர்களை கையாளும் விதம் குறித்த அல்குர்ஆன் வசனங்களுக்கு, தவறான முறையில் அர்த்தம் கற்பித்து, முஸ்லிம்களை தீவிரவாதத்தின்பால் ஈடுபாடுடையவர்களாக

11 »»»»

## கட்சியை காப்பாற்றும் நோக்கில் தான் மு.கா. செயலாளர் மாற்றம் அமைந்தது

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



■ பிறவ்ஸ் முஹம்மட்

முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் பதவியில் செய்திருக்கின்ற மாற்றம் மிகவும் தற்காலிகமானது. இந்த மாற்றம் என்னைக் காப்பாற்றுவதற்காக செய்யப்பட்ட ஒன்றல்ல. மாறாக கட்சியைப் பாதுகாக்கும் நோக்கத்தில் இந்த மாற்றத்தை கட்டாயம் செய்யவேண்டிய தேவையேற்பட்டது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சனிக்கிழமை கண்டி ஒக்ரே ஹோட்டலில் நடைபெற்ற

11 »»»»

# சீனன் கோட்டையில் டெங்கு தீவிரம்: 800 பேருக்கு இரத்தப் பரிசோதனை





(பேருவளை நிருபர்)

பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சீனன் கோட்டைப்பகுதியில் கடந்த சில நாட்களாக டெங்கு நோய் தீவிரமாக பரவியுள்ளதையடுத்து இப்பிரதேச வாழ் மக்கள் பெரும் அச்சம் கொண்டுள்ளனர்.

காய்ச்சல் நோய் உள்ளவர்களுக்கு டெங்கு நோய் உள்ளதா? என்பதைப் பற்றி பரிசோதிக்கும் இலவச இரத்தப்பரிசோதனை முகாம் சீனன்கோட்டை பளீல் ஹாஜியார் மாவத்தையில் உள்ள வைத்தியர் நூருல் இஸ்லாமின் வைத்திய சிகிச்சை நிலையத்தில் இடம்பெற்றது.

சீனன் கோட்டை பவுண்டேசன் ஏற்பாட்டிலான இரத்தப்பரிசோதனை முகாம் நேற்று 27 ஆம் திகதி இடம்பெற்றதோடு சுமார் 800 பேருக்கு இங்கு இரத்தப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாக வைத்தியர் நூருல் இஸ்லாம் தெரிவித்தார்.

சீனன் கோட்டை பவுண்டேசன் தலைவர் எம்.பஸால் மர்ஸுக் உட்பட அதன் உறுப்பினர்கள் சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச்செயலாளர் எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். கடந்த 23 ஆம் திகதி இரத்தப்பரிசோதனை முகாமொன்றை நடத்தியபோது 250 பேர் இரத்தப்பரிசோதனை செய்தனர். இதன்போது 18 பேருக்கு டெங்கு நோய் இருப்பதாக அடையாளம் காணப்பட்டனர். இப்பகுதியில் டெங்கு நோய் வேகமாகப்பரவியுள்ளதையடுத்து பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மக்களை விழிப்பூட்டும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் வீடு வீடாகச்சென்று பரிசோதனை செய்வதோடு புகைவிசுருதல் பணிகளையும் முன்னெடுத்துள்ளனர். டெங்கு நோய் மேலும் பரவாது மக்களை விழிப்பூட்டும் வேலைத்திட்டங்களை சீனன் கோட்டை பள்ளிச்சங்கமும் முன்னெடுத்துள்ளதாக அதன் தலைவர் ராமிஸ்.ஏ.கபூர் தெரிவித்தார். டெங்கு நோயினால் கடந்த 23,24 ஆம் திகதிகளில் இரு பெண்கள் மரணமாகியமையும் குறிப்பிடத்தக்கது. பிரதேச மக்கள் தமது சுற்றுச்சூழலை சுத்தம் செய்து வருகின்ற போதிலும் வடிகான்கள், ஓடைகள், அசுத்த நிலையில் காணப்படுகின்றதோடு நகரசபை இதை சுத்தம் செய்ய வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## கண்காட்சி

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயத்தின் 20ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மாணவர்களின் கண்காட்சியும் கலை நிகழ்ச்சியும் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மார்ச் மாதம் 2ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 3 நாட்கள் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மகரூப் மற்றும் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு இக் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கின்றனர். அன்றைய தினம் மாணவர்களின் கைப் பணி, தையல் மற்றும் அழகு சாதன பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது. இரண்டாம் நாள்(1) நிகழ்வில் கிழக்கு மாகாண சபை முன்னாள் தவிசாளர் எச்.எம்.எம்.பாயிஸ், 3ஆம் நாள்(2) நிகழ்வில் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடவுள்ளதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## புதிய அங்கத்தவர் சேர்ப்பு

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான புதிய அங்கத்தவர்களை உள்வாங்கவும் பழைய உறுப்பினர்களின் அங்கத்துவத்தை புதுப்பித்துகொள்ளவும் மார்ச் மாதம் 1ஆம் திகதி வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களை பின்வருவோரிடம் பெற்றுக்கொள்ளலாம். சங்கத்தின் தலைவர் லசந்த ருஹுணுகே 0773124856, துமிந்த சம்பத்-0773181731, பி. தவராசா 0779776979 குமார அலகியவன்ன 0717893558.

## செயலமர்வு

(கல்முனை எஸ்.அஷ்ரப்கான்)

லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் ஸ்ரீ லங்கா ஆதரவில் குமார் அழகுக்கலை நிலையம் நடாத்தும் பெண்களுக்கான அழகுக் கலை செயலமர்வு எதிர்வரும் மார்ச் 12ஆம் திகதி காலை 09 மணி முதல் 12.30 வரை சாய்ந்தமருது பரடைஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் ஸ்ரீ லங்கா அமைப்பின் தலைவர் மருதூர் ஏ.எல். அன்ஸார் தலைமையில் நடைபெறும் இந்த செயலமர்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களோடு தொடர்புகொள்ளலாம். 077-5020692, 0757587449, 077-9322792.

### இத்தாலியில் காலமானார்



இலங்கை - சிலாபத்தை சேர்ந்தவரும், இத்தாலி, மிலானோவில் 16 வருடமாக குடும்பத்துடன் வசித்து வரும் (2 பிள்ளைகளின் தந்தை) முகம்மத் ரீசா (49 வயது) நேற்றுமுன்தினம் இத்தாலியில் காலமானார். கடந்த சில வருடங்களாக சுகயீனமாக இருந்த நிலையிலே அவர் காலமானார். அவர் சிலாபம் மன்சூர் அவர்களின் மகனும், ரிபாயின் சகோதரரும், இந்திகாப், ஹயாஸ் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

# சமயங்களினூடாக நல்லிணக்கம் பயிற்சிப் பட்டறை



(பகுர்)

இலங்கை தேசிய சமாதான பேரவை அட்டாளைச்சேனை ரூ விஷன் கிராமிய அமைப்பின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்த ''சமயங்களினூடாக நல்லிணக்கம் காணல்'' எனும் கருப் பொருளை அடிப்படையாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் நடாத்திவரும் பயிற்சிப் பட்டறை கடந்த சனி,ஞாயிறு தினங்களில் சாய்ந்தமருது பரடைஸ் மண்டபத்தில் கிராமிய அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சி.எம். உவைஸ் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சிப் வகுப்பில் பன்மைத்துவம் (Pluralism) தொடர்பாக வளவாளர் ஜெபமாலி முத்து பெனடிக்ற் கலந்து கொண்டு பன்மைத்துவத்தின் வரைவிலக்கணம், விழுமியங்கள், எண்ணக்கரு, சமய பன்மைத்துவம் போன்றவைகள் தொடர்பாக விரிவான விளக்கமளித்தார்.

மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட மூவினங்களையும் சேர்ந்த பயிற்சியாளர்கள் இதில் பங்குபற்றினர்.

இவர்களது குழு நிலைச் செயற்பாடு, குழுநாடகம் போன்றவைகளும் இடம்பெற்றன. இப்பயிற்சிப் பட்டறையில் சமயத் தலைவர்கள், இளைஞர்கள், மாதர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாற்றுத்திறனாளிகள் என பலதரப்பினரும் கலந்து கொண்டனர்.

## வாசகர் கடிதம்

**மஹிந்த ராஜபக்ஷ தம்புள்ளையில்**

### பள்ளிவாசல் அமைப்பதற்கு 40 பேர்ச்சஸ் காணி ஒதுக்கீடு

தம்புள்ளை பள்ளிவாசலுக்கு காணி வழங்குவது தொடர்பாக முஹம்மத் உவைஸ் என்பவர் எழுதியிருந்த கட்டுரையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது குற்றஞ்சாட்டி எழுதியிருந்தார்.

தம்புள்ளை பிரச்சினையையடுத்து நகரில் பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கு 40 பேர்ச்சஸ் காணியை ஒதுக்கி அரசாங்கத்தினாலே மருதானை பள்ளிவாசலுக்கு சமாந்தரமாக ஒரு பள்ளிவாசலினை நிர்மாணித்துத் தருவதாக மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். இன்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் அசாத்சாலி போன்றோர் இதற்கு இணக்கம் தெரிவிக்காது பள்ளிவாசல் இருந்த இடத்திலேயே இருக்க வேண்டும் என பிடிவாதம் பிடித்தனர். இதனால் தம்புள்ளையில் அழகான பள்ளிவாசல் ஒன்று நிர்மாணிக்கப்படுவது இல்லாது போனது. இப்படியிருக்க நல்லாட்சி அரசு 18 பேர்ச்சஸ் காணியை பள்ளிவாசலுக்காக வழங்குவது என்பதை எந்த வகையிலும் அங்கீகரிக்க முடியாது.

அது மாத்திரமல்லாது சம்பிக்க போன்றோர் 18 பேர்ச்சஸை விட கூடுதலாக தரமுடியாது என்றும் இன்னொரு பக்கத்தில் முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல் கட்டுவதற்கு காணி வழங்கக் கூடாதென்றும் கையெழுத்து வேட்டைகள் நடைபெற்றன. அந்தவகையில் முன்னாள் ஜனாதிபதி உறுதியளித்ததுபோல் 40 பேர்ச்சஸ் காணியையும் பெற்று பள்ளிவாசல்களையும் பெற்றிருந்தால் இப்பிரச்சினை வந்திருக்குமா?

இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் முஸ்லிம்களின் பங்கு மிக அதிகமானது. எனவே கடந்த ஆட்சி காலத்தின் சலுகையை விட அதிகமான சலுகைகளை பெற்றுக்கொடுத்து முஸ்லிம்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்கவேண்டும் என்று கேட்டு கொள்கின்றேன்.

ஏ.ஓ.முஹாரிஸ் முன்னாள் தேசிய அமைப்பாளர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி



அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தை ஆரம்ப வைத்திய பாரமரிப்பு பிரிவு 1983 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ் வைத்தியசாலையில் சேதமடைந்து காணப்படுகின்ற கிளினிக் நிலையக் கட்டடத்தினை திருத்தியமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படும் கிளினிக் நிலைய கட்டடத்தினை படத்தில் காணலாம்.

(படம்: எம்.முஹம்மட் ஜபீர் -சவளக்கடை )

### புத்தளம் வீதிகள் திருத்தப்படுமா?

புத்தளம் கடையார் குளம் எனும் கடுமையான் குளம் வீதி புனரமைக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் அரசியல் போட்டியின் காரணமாக தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த வீதியோடு இணைக்கப்பட்டுள்ள நிவ் செட்டில்மண்ட் வீதி சுமார் 30 வருடமாக திருத்தப்படாமல் உள்ளது. இந்த வீதியில் தான் சுகாதார சேவை உதவி அதிகாரியின் வீடும் அமைந்துள்ளது. இவரின் வீட்டுக்கு முன்னால் உள்ள கால்வாயில் நீர் ஓட முடியாமல் தேங்கி நிற்கிறது. இந்த வீதியில் உள்ள தெரு விளக்கும் சரியான ஒளி தருவதில்லை.

இந்த அதிகாரியை சந்திக்க வருபவர்கள் மிகவும் சிரமப்பட்டு இவரின் வீட்டுக்கு வருகின்றார்கள். பலமுறை இந்தப்பிரச்சினையை உயரதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும் இதுவரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே தயவு செய்து உடனடியாக இதற்கு தீர்வு காணுமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

(ஏ.அமானுல்லா புத்தளம்)

### தமிழில் அறிவித்தல்கள் இல்லை

மாத்தளை பதிவாளர் திணைக்களத்தில் உள்ள அறிவிப்பு அறிவித்தல்கள் எல்லாம் சிங்களத்திலேயே காணப்படுகிறது. தமிழில் காணப்படவில்லை இங்கு மரணச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் உறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு பிரதிகள், விவாக, விவாகரத்து சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தமிழில் விபரங்கள் தாங்கிய அறிவித்தல்கள் இல்லாதபடியால் தமிழ் முஸ்லிம் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக மாத்தளை மாவட்ட தோட்டப்பகுதி தமிழ் மக்கள் இதனால் பலத்த சிரமங்களை மேற்கொள்வதை காணக்கூடியதாகவுள்ளது.

இது பலத்த குறையாக காணப்படுவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமிழில் அறிவிப்புக்களை தொங்கவிடுமாறு தமிழ், முஸ்லிம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(வஹக்கோட்டை ஏ.ஸீ.ஏ.முனாஸ்)

**பிரதி செவ்வாய்க்கிழமை நாட்களிலும் வாசகர் கடிதம் பிரசுரமாகும். உங்கள் பிரச்சினைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்பவும்.**

**வாசகர் கடிதம்**
**நவமணி**
**156, ஆஸ்பத்திரி வீதி,**
**தெஹிவளை.**

# பாதை அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு தடையுத்தரவு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

பாதை அனுமதிப்பத்திரமின்றி கல்முனையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக கொழும்புக்கு போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெறுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

இந்த இணக்கப்பாட்டின் பிரகாரமே அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருக்கின்ற பஸ்களின் உரிமையாளர்கள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு நடவடிக்கை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக பாதை அனுமதிப் பத்திரத்துடன் கொழும்புக்கு போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதுடன் காரைதீவு கண்ணகி அம்மன் கோவில் முன்பாக அனைத்து பஸ்களையும் கொண்டு வந்து நிறுத்தி, கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு விரைந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், தொலைபேசி மூலம் பொலிஸ் உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, அவ்விடத்திற்கு வரவழைத்து, குறித்த பாதை அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள பஸ்களின் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

பாதை அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களின் உரிமையாளர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்று அவர்களது பஸ்கள் சேவையில் ஈடுபடாமல் தடுக்கப்பட வேண்டும் என இதன்போது பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் வலியுறுத்திய தனியார் பஸ்களின் உரிமையாளர்கள், இல்லா விட்டால் தாம் இன்று சேவையில் ஈடுமடாமல் பகிஸ்கரிப்பை தொடருவோம் என்று தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் உயர் அதிகாரிகள், உரிய நடவடிக்கைக்கு கால அவகாசம் கோரியதுடன் திங்கட்கிழமை (27) அல்லது அடுத்த ஒரு சில தினங்களுக்குள் சட்டவிரோதமாக சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தடையுத்தரவை பெற்று, தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து பகிஷ்காரிப்பு முடிவுக்கு வந்தது.

அதேவேளை பாதை அனுமதிப் பத்திரமின்றி கல்முனையில் இருந்து மட்டக்களப்பு ஊடாக கொழும்புக்கு போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களை சேவையில் இருந்து தடுப்பதற்கான நீதிமன்ற தடையுத்தரவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை கல்முனைப் பொலிஸார் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளனர் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

## காணவில்லை



(பாணந்துறை எம்.கே.எம். அஸ்வர்)

பாணந்துறை, ஹேனமுல்லை, வத்தல்பொல வீதி இலக்கம் 357,இல் -வசித்த 22 வயதுடைய அப்துல் ரஹ்மான் (லக்பீர்) எனும் இளைஞரை கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி முதல் காணவில்லை என அவரது தாயார் பாணந்துறை வடக்கு பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது அவரது தாயார் சித்தி ஹாலியாவின்.038 4901747 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினை**

# ஜனாதிபதி, பிரதமர் கவனத்துக்கு கொண்டு செல்ல ஹிஸ்புல்லாஹ் நடவடிக்கை

(ஆர்.ஹஸன்)

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் முன்னெடுத்து வரும் ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்றுமுன்தினம் போராட்டகளத்துக்கு விரைந்தார்.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகள், பிரச்சினைகளை கேட்டறிந்த இராஜாங்க அமைச்சர், இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது கவனத்துக்கு கொண்டு வருவதாகவும் உறுதியளித்தார்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மட்டு. காந்தி சதுக்கத்தில் முன்னெடுத்து வரும் கவனயீர்ப்பு போராட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆறாவது நாளாகவும் தொடர்ந்தது. இந்நிலையில், அவர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடும் நோக்கில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அங்கு சென்றார்.

அத்துடன், தான் கொழும்புக்கு சென்ற பின்னர் அரச உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இப்பிரச்சினையை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் அங்கு உறுதியளித்தார்.

# பாடசாலையை புறக்கணிக்கும் 51 ஆயிரம் பிள்ளைகள்

நாட்டில் சுதந்திரக்கல்வி நடைமுறைக் குட்படுத்தப்பட்டு பிள்ளைகளுக்கு பாடசாலை புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டாலும், பாடசாலை சீருடைகள் அரசினால் வழங்கப்பட்டாலும் எந்தவொரு பாடசாலைக்கும் செல்லாத 51 ஆயிரத்து 249 பிள்ளைகள நாட்டில் உள்ளதாக கடந்த வருடத்தில் வெளியிடப்பட்ட குழந்தைகள் நடவடிக்கைகள் தொடர்பிலான பரிசோதனையிலேயே தெரிவிக்கப்பட்டது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினாலும், தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அமைச்சினாலும் வெளியிடப்பட்ட குறித்த அறிக்கையில்,

5-17 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் 4 இலட்சத்து 1412 பிள்ளைகள் வெவ்வேறு காரணங்களினால் பாடசாலை செல்வதை நிறுத்தியுள்ளனர். இதே வேளை, பாடசாலை செல்லும் வயதான 5 -17 வயதுக்குட்பட்ட 4 கோடியே 5 இலட்சத்து 71 ஆயிரத்து 442 பிள்ளைகள் நாட்டில் உள்ளனர்.

இவர்களில், 4 கோடியே ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 781 பிள்ளைகள் பாடசாலை செல்கின்றனர். நூற்றுக்கு 90.1 சதவீதமான பிள்ளைகளே பாடசாலை கல்வியை தொடருகின்றனர். இவர்களில் 4 இலட்சத்து 52 ஆயிரத்து 661 பிள்ளைகள் வெவ்வேறு காரணங்களினால் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர். அதன் சதவீதம் 09.9 வீதமாகும்.

5-11 வதுகுட்பட்ட 2 கோடியே 54 இலட்சத்து 1337 பிள்ளைகள் இருந்த போதிலும், இவர்களில் 54 ஆயிரத்து 214 (2.1) பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை. 12-14 வயதுக்குட்பட்ட 1 கோடியே 69 ஆயிரத்து 478 பிள்ளைகளில் 17 ஆயிரத்து 468(1.6) பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதில்லை.

15-17 வயதுக்குட்பட்ட 9 இலட்சத்து 60 ஆயிரத்து 627 பிள்ளைகளில் 5 இலட்சத்து 79 ஆயிரத்து 647 பிள்ளைகள் (60.3) பாடசாலை செல்வதோடு, 3 இலட்சத்து 80 ஆயிரத்து 979 (39.7) பிள்ளைகள் பாடசாலை செல்வதை நிறுத்தியுள்ளனர்.

பாடசலை செல்லும் பிள்ளைகளில் ஆண் பெண் என பிரித்து பார்க்கும் போது, 5-17 வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் 2 கோடியே 30 இலட்சத்து 7805 பிள்ளைகள் ஆண் பிள்ளைகள் என்றும், 2 கோடியே 2 இலட்சத்து 63 ஆயிரத்து 637 பிள்ளைகள் பெண் பிள்ளைகள் என்றும், இவர்களுள் பாடசாலை செல்லாத 2 இலட்சத்து 30 ஆயிரத்து 700 ஆண்பிள்ளைகளும், 2 இலட்சத்து 21 ஆயிரத்து 961 பெண் பிள்ளைகளும் பாடசாலை செல்லாமல் உள்ளனர் என்றும் குறித்த அறிக்கையில் பதிவாகியுள்ளது.

## 'நீங்கள் நீதியின் முன்' சட்ட வாரம் ஆரம்பம்

நீங்கள் நீதியின் முன் எனும் தொனிப்பொருளில் சட்டம் தொடர்பிலான மக்களுக்கு தெளிவூட்டும் சட்ட வாரம் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டிலுள்ள அனைத்து மத்திய நிலையங்களிலும் ஆயிரத்திற்கும் அதிகளவான சட்டத்தரணிகளின் பங்குப்பற்றுதலுடன் சட்டவாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த சட்டவாரத்தின் மூலம் சட்டம் தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் சட்டம் தொடர்பான நன்கொடைகளை இலவசமாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்காக சட்ட நூல் ஒன்றை வெளியிடுவதற்கும், ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு தெளிவூட்டவும், சட்ட மாணவர்களுக்கு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் சிறைச்சாலை திணைக்களத்தின் ஊடாக வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் குறித்த சங்கம் தெரிவித்தது.

மேலும், சட்டம் தொடர்பான மேலதிக விடயங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள 0113133864, 0113133872 ஆகிய தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்தது.



## எதிர்காலத்தில் 30 வீத பெண்கள் பாராளுமன்றத்திற்கு வரவேண்டும்

**சபாநாயகர் கரு ஜயசூரிய**



(அஷ்ரப். ஏ. சமத்)

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்குமான பயிற்சிப் பட்டறை நேற்று இலங்கை பாராளுமன்றத்தின் கமிட்டி அரை 01 இல் ஆரம்பமானது. இந் நிகழ்வில் சபாநாயகர் கருஜயசூரிய பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயிற்சியை ஆரம்பித்து வைத்தார். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசாநாயக்கவும் கலந்து கொண்டார்.

இதில் கருத்து தெரிவித்த சபாநாயகர், இலங்கைப் பாராளுமன்றத்தில் 10 பெண் பிரதிநிகள் மட்டுமே தற்பொழுது உள்ளனர். ஆனால் இளைஞர் பாராளுமன்றத்தில் 30 வீதத்திற்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் உள்ளதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். எதிர்காலத்தில் இலங்கை பாராளுமன்றத்தில் 30 வீத பெண்கள் பாராளுமன்ற அங்கத்துவத்தை வகிக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். இந்த நாட்டில் 51 வீதத்திற்கும் மேற்பட்ட பெண் சனத்தொகையினர் உள்ளனர். அவர்களது குரல் இங்கு ஒலிக்க வேண்டும். இந்த நாட்டில் 22 மில்லியன் மக்கள் உள்ளனர். இம் மக்களின் 225 மக்கள் பிரநிதிகள் உள்ளனர். அதே போன்றே இளைஞர் பாராளுமன்றத்தில் 225 பிரநிதிகள் அங்கம் வகிக்கின்றீர்கள். உலகில் உள்ள பாராளு மன்றங்களின் உள்ள சிறந்த ஒழுக்க விதிமுறைகளை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும். இலங்கை பாராளுமன்றத்தில் உள்ள சட்ட திட்டங்கள் நிதி, நீதி, சட்டம், நிலையற் சட்டங்கள், வரவு செலவு மற்றும் அபிவிருத்திகள் மக்களது பிரச்சினைகள் அரசியல் அதிகாரங்கள், சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்ற பல்வேறு ஒழுங்கு விதிகளை இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். அவற்றினை நீங்கள் கூடி கலந்து ஆலோசித்து விவாதித்து எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக விளங்க வேண்டும் என சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

## ஆசிய குளிர்கால போட்டியில் இலங்கை மாணவி பங்கேற்பு



ஜப்பானில் இடம் பெற்ற ஆசிய குளிர்கால போட்டியில் இலங்கையை சேர்ந்த இளம் மாணவி ஒருவர் பங்குபற்றியிருந்தார். 16 வயதுடைய அஸ்கியா யூசுப் என்ற மாணவியே ஸ்னோ போர்டின் என்ற போட்டியில் பங்கேற்றார்.

அனுபவம் மற்றும் திறமைகளில் அதிகமுள்ள நாடுகளை சேர்ந்தவர்கள், இலங்கை பெண்ணை முந்திச் செல்லும் போதிலும் போட்டியை எப்படியாவது நிறைவு செய்ய வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பாகியுள்ளது.

பல முறை கீழே விழுந்த போதிலும் அவர் முயற்சியை கைவிடவில்லை. போட்டியில் பதக்கத்தை இழந்த போதிலும் அவர் அந்த போட்டியை முழுமையாக நிறைவு செய்திருந்தார். அதற்கமைய ஆசிய குளிர்கால போட்டியில் கலந்து கொண்ட முதல் இலங்கையர் என அவரது பெயர் வரலாற்றில் பதிவாகியுள்ளது என சர்வதேச ஊடகம் தெரிவித்தது.

## மட்டு.முன்னாள் மேயரின் கணவர் கைது

(ஏறாவூர் நிருபர்-ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு முன்னாள் மேயர் சிவகீதா பிரபாகரனின் வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 4 மணியளவில் இடம்பெற்ற கோடரி வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக முன்னாள் மேயரின் கணவர் கனகசபை பிரபாகரன் (47) கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நபரொருவர் மேற்படி மட்டக்களப்பு முன்னாள் மேயரின் வீட்டில் வெட்டப்பட்டுக் கிடப்பதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் அங்கு சென்று காயம்பட்ட நபரை மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்த்ததோடு, முன்னாள் மேயரின் கணவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இச்சம்பத்தைத் தொடர்ந்து சிவகீதாவின் வீட்டில் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச நாணய நிதியத்தின் முகாமையாளர் இலங்கை வருகை



சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி கிறிஸ்டினா லகார்ட் எதிர்வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நிதியத்தின் உள்நாட்டு அலுவலகம் இவரின் வருகைக்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் கடந்த மாதம் சுவிற்சர்லாந்தில் இவரை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாந்தோட்டை மோதல் சம்பவம்; 24 பேரும் பிணையில் விடுதலை



அம்பாந்தோட்டை மோதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த 24 பேரும் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அம்பாந்தோட்டை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

சந்தேகநபர்களை தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் விடுதலைசெய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அம்பாந்தோட்டை மிரிஜ்ஜவில பகுதியில் இடம் பெற்ற இலங்கை -சீன கைத்தொழில் மற்றும் ;பொருளாதார அபிவிருந்தி வலய நிகழ்வின் போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஜனவரி மாதம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தில் 21 ற்கும் மேற்பட்டவர்கள் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாடகர் எஸ்.ஜி.சாந்தனின் இறுதிகிரியை இன்று



ஈழத்தின் முன்னணிப் பாடகர் எஸ்.ஜி. சாந்தனின் இறுதிகிரியைகள் இன்று செவ்வாய்கிழமை நடைபெறவுள்ளது.

பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக இன்று மாங்குளத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம்; உயிரிழந்தார்.

அவருடைய பூதவுடல் யாழ்ப்பாணம் ஒட்டுமடத்திலுள்ள மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு நேற்று மாங்குளத்திலும் வைக்கப்பட்டு, இறுதிகிரியைகள் இன்று நடைபெறவுள்ளது.

## மின்கட்டணத்தை குறைத்து கட்டண சலுகையை பெறுங்கள்

**அமைச்சர் சியம்பலாபிடிய**



மின்சாரக் கட்டணத்தை முன்னைய மாதத்தை விட பத்து சதவீதத்தால் குறைத்துக்கொள்ளும் சகல வீட்டுப் பாவனையாளர்களுக்கும் பத்து சதவீத சலுகைக் கட்டணத்தை வழங்குவதற்கு மின்சக்தி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதன்படி உதாரணமாக முன்னைய மாதத்தில் மாதாந்த கட்டணம் 100 ரூபாவாக இருந்தால் தற்போதைய மாதத்தில் அது 90 ரூபாவாகக் குறைந்தால் 10 சதவீதக் கட்டணக்கழிவு கிடைக்கும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 1987 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய தெரிவித்தார்.

மின்சார நெருக்கடிக்கு ஒரு தீர்வாக மின் பாவனையைக் குறைத்துப் பயன்படுத்தப்படுவதனை ஊக்குவிப்பதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு உழைக்கும் ஊடகவியலாளர்கள் கண்டனம்

ஊடகவியலாளரொருவரைத் தாக்கிய கடற்படைத் தளபதியின் சேவைக் காலத்தை ஜனாதிபதி நீடித்துள்ளதை இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தினர் கண்டித்துள்ளதோடு, ஊடக சுதந்திரம், நல்லாட்சி குறித்து ஜனாதிபதியின் உண்மையான நிலைப்பாடு இதுவா? என்று கேள்வியும் எழுப்பியுள்ளது.

கடற்படைத் தளபதியின் சேவைக் காலத்தை மேலும் ஆறு மாதங்கள் வரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீடித்துள்ளது குறித்து அவ்வமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹம்பந்தோட்டை துறைமுகத்தில் ஊடகவியலாளரை தாக்கிய சம்பவத்தின் அறிக்கைகள் வெளியாக முன்பே சேவைக்காலம் நீடிக்கப்பட்டுள்ளமை குறித்து பலத்த அதிருப்தியையும் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த காலங்களில் ஊடகவியலாளர் கொலைகள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள், ஊடக அடக்குமுறைகள் அதிகமாக நிகழ்ந்துள்ளன. இந்நிலை மாறும் என்ற அடிப்படையிலேயே ஊடகங்கள் நல்லாட்சி உருவாக்கத்திற்கு ஒத்துழைத்திருந்தது. இங்கும் ஊடக சுதந்திரம் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றதா? ஊடக அடக்குமுறைகளுக்கெதிரான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படவேண்டும் என்று நாம் பலமுறை ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளோம். எனினும் அது தொடர்பாக கவனம் செலுத்த இந்த அரசாங்கம் தவறியுள்ளது.

## விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பான கலந்துரையாடல்



வறட்சியை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான மற்றுமொரு கலந்துரையாடல் நாளை காலை 8.00 மணியளவில் இடம் பெறவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்தது.

இது தொடர்பில் அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, அனுர பிரியதர்ஷன யாப்பா, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உயர திகாரிகளுக்கு இடையிலான ஒரு சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இன்று நடைபெறும் கலந்துரையாடலில் எடுக்கப்படும் தீர்மானங்களை அமைச்சரவைக்கு அறிவிக்க அமைச்சர்கள் தயாராகி வருகின்றனர்.

வறட்சியை எதிர்கொண்ட விவசாயிகளுக்கு ஒரு மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தேசித்துள்ளார்.

விவசாயிகள் தொடர்பில் கலந்துரையாடலே இன்று கலந்துரையாடப்படவுள்ளதோடு, இது தொடர்பான இறுதி தீர்மானமும் எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்ற முன்னாள் கொழும்பு மேயர் ஏ.ஜே.எம்.முஸம்மிலுக்கான அறிமுகச் சான்றுகளை மலேசிய மன்னன் யாங் டீ பெர்துஆன் அகொங் சுல்தான் அண்மையில் வழங்கிவைத்தார். மேலும், மலேசிய சுல்தான் இலங்கை ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதோடு, எதிர்காலத்தில் இலங்கையுடன் இருதரப்பு அபிவிருத்தி முயற்சிகளிலும் கவனம் செலுத்தவுள்ளதாக இலங்கைக்கான மலேசிய தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
28TH FEBRUARY 2017 - TUESDAY

# ஜெனீவா மகாநாடும் நல்லிணக்கப் பொறிமுறையும்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 34 ஆவது அமர்வு, நேற்று [27] சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் ஆரம்பித்தது. இந்த அமர்வு இலங்கை தொடர்பில் மிகவும் முக்கியமான ஒரு சர்வதேச அமர்வாகும். ஏனெனில், இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் நல்லிணக்க பொறிமுறை குறித்து இதில் கவனம் செலுத்தப்படுகின்றது.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை செய்த விடயங்களை அமுல்படுத்துவதற்கு, வழங்கப்பட்ட காலக்கெடு இம்மாதம் முடிவடைந்துள்ள நிலையிலேயே, நேற்று 34 ஆவது அமர்வு ஆரம்பமாகியது.

எனினும், இலங்கையில் இன, மத நல்லிணக்கத்தை நோக்கிய செயற்பாடுகள் எதுவும் முழுமையாக அமுல்படுத்தப்படாத நிலையில், இன்னும் இரு வருடகால அவகாசத்தை, மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம், இலங்கை வெளிவிவகார அமைச்சு கோரும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிகின்றது.

இலங்கையில் 3 தசாப்தங்களுக்கும் மேலாக நடைபெற்ற உள்நாட்டுப் போரில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும், இலங்கை இராணுவத் தரப்பும், மனித உரிமை மீறல்களிலும், போர்க் குற்றங்களிலும் ஈடுபட்டதாகவும், அது குறித்து முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் சர்வதேச சமூகம் கோரி வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட வெளிவிவகாரக் கொள்கையின் சமநிலையற்ற தன்மை காரணமாக, இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படுகின்ற போர்க் குற்றங்கள் தொடர்பிலும், நல்லிணக்க நடவடிக்கைகளின் மந்த கதி குறித்தும் மேற்கு நாடுகள் பெருமளவு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியிருந்தன.

எவ்வாறாயினும், 2015 இல் ராஜபக்ஷவினரின் ஆட்சி வீழ்ந்து, மைத்திரி – ரணில் நல்லாட்சி மலர்ந்ததும், மேற்கு நாடுகளின் இலங்கையின் பாலான கொள்கையில் சில நெகிழ்வுகள் உருவாகின.

எனவே, ராஜபக்ஷவினரின் ஆட்சிக் காலம் போலல்லாது, இலங்கைக்கு மீளவும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையும் வழங்கப்பட்டது.

எனினும், இலங்கையில் நடைபெற்ற 3 தசாப்தங்களுக்கும் மேலான யுத்தத்தின் வடுக்களை அழிப்பதற்கு, நல்லாட்சி அரசாலும் முடியாதுள்ளதாகவே மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஏனெனில். ராஜபக்ஷவினரின் காலத்தில் போன்றே, தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்கள் மீதான அடக்குமுறைகளும், வன்முறைகளும் வெவ்வேறு வழிமுறைகள் மூலம் இன்னும் மேற்கொள்ளப்பட்டே வருகின்றன.

1990 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு மாகாணத்திலிருந்து விரட்டிய முஸ்லிம் சமூகத்தினருக்கு, இன்னும் நீதி வழங்கப்படவில்லை. வடக்கு முஸ்லிம்கள் மீளவும் தமது தாயகத்தில் குடியேறுவதற்கான வசதிகள் இன்னும் முழுமையாக ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

புத்தளம் மாவட்டம் உள்ளிட்டு, நாட்டின் எல்லா பிரதேசங்களிலும் வடக்கு முஸ்லிம்கள் இன்னும் அகதிகளாகவே வாழ்கின்றனர். வடக்கில் மக்களை குடியேற்றுவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றபோதும், முஸ்லிம் சமூகத்தினரை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் தேக்கமடைந்துள்ளன.

அதேநேரம், சில பகுதிகளில் தமிழ் மக்களும் முறையாக மீளக் குடியமர்த்தப்படவில்லை. இப்போது நடைபெற்றுவரும் கேப்பாப்புலவு மக்களின் போராட்டம் இந்த அடிப்படையிலானதாகும். இங்கு, மக்கள் மீளக்குடியமர்த்தப்படாததோடு, மக்களின் காணிகளை இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ளது.

யுத்தம் முடிவடைந்து 7 வருடங்கள் கடந்துள்ளபோதும், இன்னும் வடக்கில் இராணுவத்தின் பிரசன்னம் அதிகமாகவே உள்ளது. இது நல்லிணக்கத்தை சாத்தியப்படுத்துவதற்கு பெரும் தடையாக உள்ளது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

யுத்தத்தால் தமிழ் சமூகம் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பது போன்று, முஸ்லிம் சமூகமும், சிங்கள சமூகமும்கூட பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டியுள்ளோம். தமிழ் தரப்பில் உயிரிழப்புக்களும், உடைமை இழப்புக்களும் நிகழ்ந்துள்ளன. அதேபோல் முஸ்லிம், சிங்கள சமூகங்களும் இவ்வாறான இழப்புக்களுக்கு முகம் கொடுத்துள்ளன.

இப்போது, நாம் செய்ய வேண்டியது, யுத்தம் உருவாகுவதற்கான காரணங்களாக அமைந்த விடயங்களை இந்த நாட்டில் இல்லாமல் செய்வதாகும். அதற்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். நல்லாட்சி அரசு நல்லிணக்க பொறிமுறை குறித்த சிறந்த தெளிவுடன்தான் இருக்கின்றது. ஆனால், அந்தப் பொறிமுறை மந்த கதியில் நடைபெறுகின்றமைதான் துரதிஷ்டமானதாகும்.

---

# பிணை முறி ஏல விற்பனை: வர்த்தமானி அறிவித்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் கையொப்பம் எப்படி வந்தது?

*மிகப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் திறைசேரி உண்டியல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிட்டது யார் என்பது தொடர்பாக கடந்த சில தினங்களாக வாத பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.*

*நல்லாட்சி அரசுக்கு பெரும் சவாலாக அமைந்திருக்கும் மத்திய வங்கி பிணை முறி தொடர்பாக ஆராய்வதற்கு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர்களான பி.கே.சித்ரசிறி, பிரசன்ன ஜயவர்தன மற்றும் முன்னாள் பிரதி கணக்காய்வாளரான கந்தசாமி வேலுப்பிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆணைக்குழு கடந்த 21 ஆம் திகதி முதல் சாட்சியங்களை பெறும் பணியை ஆரம்பித்தது. முதன் முறையாக சாட்சியமளிப்பதற்காக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி அழைக்கப்பட்டார். அவர் முதலாம் நாள் 3 மணி நேரம் சாட்சியமளித்தார். மேலதிக சோல்சிடர் ஜெனரல் தப்புல லிவேரா எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மத்திய வங்கி ஆளுநர் திறைசேரி பிணை வழங்குவதில் முன்பிருக்கின்ற முறையை நீக்கி புதிய முறையொன்றை தொடங்குவது தொடர்பாக அவதானம் செலுத்துவதாக தெரிவித்தார். பழைய முறைகள் காரணமாக பல பிரச்சினைகள் உருவாகியிருப்பதாகவும், அதனாலேயே பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். பிணை முறி வழங்குவது தொடர்பாக முன்பிருந்த முறைக்கு பதிலாக ஏல விற்பனை முறையுடன் இணைந்த ஒரு புதிய முறையை அறிமுகப்படுத்தவுள்ளோம். இது தொடர்பாக அரசின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. முன்பிருந்த நேரடியான நிலையான முறையை 2015இல் நிறுத்தி விட்டோம். இப்போது ஏல விற்பனைப் படியே பிணை முறி வழங்கப்படுகிறது. பிணை முறி ஏல விற்பனையின் போது அதன் இரகசிய தகவல்கள் ஓர் ஆரம்ப கொள்வனவாளரின் கைக்கு கிடைத்தால் ஏனைய கொள்வனவாளர்களை விட அவருக்கு முறையற்ற முறையில் இலாபத்தைச் சம்பாதிப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இந்த ஏல விற்பனையில் அரசு கேட்டிருக்கின்ற பணத்தை விட கூடுதலான பெறுமானமிகு முறிகள் விற்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆணைக் குழுவில் லிவேரா எழுப்பிய குறுக்குக் கேள்விக்கு பதிலளித்த மத்திய வங்கி ஆளுநர், பிணை முறி உண்டியல்களை விற்பவர்கள் யார் என்பது பற்றி விளக்குகையில் சில்லறை முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் என்றும் தெரிவித்தார். அவர்கள் மத்திய வைப்பு அலகில் தங்களை பதிவு செய்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அவை யாவும் பகிரங்கத் தன்மையோடு இடம்பெறுவதாகவும் கலாநிதி குமாரசாமி தெரிவித்தார்.*

*இலங்கை மத்திய வங்கியின் 2015 பெப்ரவரி 01ஆம் திகதி முதல் மார்ச் 31 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில் திறைசேரியால் வழங்கப்பட்ட பிணை முறி தொடர்பாக விசாரணை செய்யவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. தான் மத்திய வங்கி ஆளுநராக 2016 ஜுலை 4ஆம் திகதி பதவியேற்றேன். அதற்கு முன்பு இப்பதவியை அர்ஜுன் மகேந்திரனே வகித்தார். அதன் பின்பு மத்திய வங்கியின் ஆளுநராகவும், பிரதான நிர்வாக அதிகாரியாகவும் தானே பணிபுரிந்ததாகவும் அவர் தெரிவித்தார். 2015 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் 03, 31 வரையிலான இடைப்பட்ட காலத்தில் மத்திய வங்கி பிணை முறிகளை விநியோகித்திருக்கிறது. திறைசேரி உண்டியல்களை வழங்குவதற்கான கேள்வி கோரப்பட்ட போது தான் இந்த நாட்டில் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். நாட்டுக்கு தேவையான நிதி முகாமைத்துவம் செய்தல், அரசுக்கு தேவைப்படும் உண்டியல்களது பலத்தை மேம்படுத்தல், பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான தீர்மானங்களை எடுத்தல் போன்றன திறைசேரி உண்டியல்களை விநியோகிக்கும்போது மத்திய வங்கியின் பிரதான பணிகள் என அவர் தெரிவித்தார்.*

*கடந்த வியாழக்கிழமை இந்த ஆணைக் குழுவில் சாட்சியமளித்த நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி எல்.எச். எஸ்.சமரதுங்க பிணை முறியை விநியோகிக்கும் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக தெரிவித்த கருத்து காரணமாக ஆணைக்குழுவின் விசாரணைகள் இடையிலே நிறுத்தப்பட்டன. விசாரணைகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. திறைசேரி உண்டியல் விநியோகிப்பது தொடர்பாக 1895 / 19 என்ற வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக சிரேஷ்ட அரச சட்டத்தரணி கலாநிதி திருமதி அவந்தி பெரேரா திறைசேரிச் செயலாளரிடம் அந்த வர்த்தமானி அறிவித்த தினம் பற்றி எழுப்பிய கேள்விக்கு 2015. ஜனவரி 1 முதல் 2015 டிசம்பர் 31ஆம் திகதி வரை இந்த வர்த்தமானி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். 2015 ஜனவரி 1ஆம் திகதி ஆகும்போது தான் நிதியமைச்சின் செயலாளராக இருக்கவில்லை என்றும், அப்போது நிதியமைச்சின் செயலாளராக பி.பி.ஜயசுந்தர இருந்தார் என்றும் தெரிவித்தார். அதன்படி குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக கவனம் செலுத்திய ஆணையாளர்கள் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தினம் குறித்து தாம் வியப்படைவதாக தெரிவித்துள்ளார்.*

*இச்சந்தர்ப்பத்தில் ஆணைக்குழுவை விளித்துப் பேசிய மேலதிக சோல்சிடர் ஜெனரல் தப்புலத லிவேரா இந்த திகதி தொடர்பாக எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், 2015 ஜனவரி 1 முதல் 2015 டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான முழுக் கால கட்டத்திற்கும் பிணை முறிகளை விநியோகிப்பதனை ஒன்றுசேர்த்து வர்த்தமானியை வெளியிடுவதாகவும் அதன்படி இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.*

*எவ்வாறானபோதும் வர்த்தமானி அறிவித்தலுக்கு இந்த திகதி எவ்வாறு வந்தது என்பது பற்றி அறிந்து கொள்வதற்கு அரச அச்சகரிமிருந்து வாய்மூலம் ஒன்றை பெறுமாறு ஆணையாளர்கள் விசாரணை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர்.*

*முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரிலே இந்த வர்த்தமானி அறிவித்தல் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. மஹிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராக இல்லாதபோது அவருடைய கையொப்பம் எப்படி பயன்படுத்தப்பட்டது என்பதே இன்று எழுப்பப்படும் பிரதான கேள்வியாக உள்ளது. இது தொடர்பாக ஆணைக் குழு முன், அரச அச்சகத்தின் பதில் அச்சகர் டி.எல்.கங்காணி கல்பனா நேற்று ஆணைக்குழு முன் ஆஜராகினார்.*

*சகல பதவிகளிலுமிருந்து நீங்கிச் சென்ற தனது பெயரில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பதன் காரணமான முழு பிணை முறி கொடுக்கல் வாங்கலும் சட்டரீதியானது அல்ல என மஹிந்த ராஜபக்ஷ இதே நேரம் தெரிவித்துள்ளார். கண்டியில் சமய நிகழ்வொன்றில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2014 ஜனவரி 09 திகதியிலிருந்து நான் பதவியில் இருக்கவில்லை. புதிய ஜனாதிபதியும், புதிய அமைச்சர்களும் பதவியேற்றிருந்தனர். நாம் பாரிய வழிப்பறி கொள்ளையாக குறிப்பிடுகின்ற பிணை முறி கொடுக்கல்வாங்கல் இந்த கால கட்டத்திலே பெப்ரவரி முதல் டிசம்பர் வரை இடம்பெறுகிறது. இவை யாவற்றையும் இப்போது எனது கணக்கில் போட்டிருக்கிறார்கள். வர்த்தமானி அறிவித்தலும் எனது பெயரிலே இருக்கின்றது. நான் முதலாம் திகதி கையொப்பமிட்ட வர்த்தமானி அறிவித்தல்களுக்கு இவர்கள் எல்லாவற்றையும் புகுர்த்தியிருக்கிறார்கள். 8ஆம் திகதி நான் பதவியிலிருந்து நீங்கிக்கொள்ளும் போது சகல பொறுப்புகளிலிருந்தும் நான் நீங்கிக்கொண்டேன். இவர்கள் தமது பொறுப்பை சரியாக நிறைவேற்றாததனால் இந்த பிணை முறிகள் சட்டரீதியற்றதாக போகின்றது. இது ஒரு போலி ஆவணமாகின்றது. இதிலிருந்து இவர்களுக்கிடையே நடைபெற்றிருக்கின்ற தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக தான் நீதிமன்றத்திற்கு போக இருப்பதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*இதேநேரம் இந்த மோசடி ஆவணத்தை ஏற்றுக்கொண்ட நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உடன் இராஜினாமா செய்ய வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. பிணை முறி கள்வர்கள், பிணை முறி தொடர்பான ஆணைக்குழுவிற்கு மோசடி ஆவணத்தை சமர்ப்பித்தது விசாரணைகளை திசை திருப்பும் நோக்கத்திலே என தேசிய சுதந்திர முன்னணியின் பிரசார செயலாளர் மொஹமட் முஸம்மில் தெரிவித்துள்ளார்.*

*உருவாகியிருக்கும் இந்த புதிய பிரச்சினையையடுத்து பிணை முறி விநியோகிப்பது தொடர்பாக 2017ஆம் ஆண்டுக்கான வர்த்தமானி அறிவித்தல் விநியோகிப்பதை நிதியமைச்சு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளது.*






## பிடிவாதம் அழிவுகளை ஏற்படுத்தும் பிரபாகரனே உதாரணம்

**-ஏ.எல்.தவம்**

**( றியாஸ் இஸ்மாயில்)**

தான் நினைத்தது மட்டும்தான் நடக்க வேண்டும் என்ற பிடிவாதம் அழிவுகளையும் இழப்புக்களையுமே ஏற்படுத்துமேயன்றி தீர்வுகளைப் பெற்றுத்தராது. பிரபாகரனைப் போன்று பிரச்சினைகளை அணுக முடியாது என்பதை அனுபவரீதியாக கண்டிருக்கிறோம். இப்போது தமிழ் சமூகம் கூட அதனைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளது என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் விவகார மற்றும் தொழில் வாய்ப்பு இணைப்பாளருமான ஏ.எல்.தவம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று மீரா நகரில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் இங்கு கருத்துக் கூறுகையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர், எந்த முறையில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதிலும், எல்லை நிர்ணயம் தொடர்பான சிக்கல்களுக்கும் தீர்வுகள் காணப்பட வேண்டுமென, சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சிறு கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து கோரிக்கைகளை வைத்திருக்கின்றன. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மேல் மாகாண மக்கள் முன்னணி என்பவற்றோடு இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இன்று வரை இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பிற்போடப்பட்டுள்ளது. இவ்வாறு பிற்போடப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரிய தீர்வாகாது. இத்தீர்வினை அடைவதில் முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமல்ல ஏனைய சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகளும் வெவ்வேறு வழிகளிலும் தமது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்காக உடனடியாக தீர்வு கிடைத்துவிட வேண்டுமெனவும், தாம் விரும்பிய தீர்வு மட்டுமே கிடைக்க வேண்டுமெனவும் ஒற்றைக்காலில் நிற்க முடியாது. அதற்கு பிரபாகரனுடையே நிலைப்பாடு மிகச் சிறந்த உதாரணம். அந்தவகையில், ரவூப் ஹக்கீமும் இன்னொரு பிரபாகரனாக மாற முடியாது என்பதை எல்லோருமே புரிந்து கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

# அமைச்சர் பைசரால் ஏற்பாடு செய்யப்பட்ட

## முதலமைச்சர்கள் கூட்டத்தை, முதலமைச்சர்கள் பகிஷ்கரித்தது ஏன்?

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் நேற்று நடத்த ஏற்பாடு செய்திருந்த முதலமைச்சர்களது கூட்டத்தில் கலந்துகொள்ளவதில்லை என மாகாண முதலமைச்சர்கள் ஏகமனதாக தீர்மானித்திருந்தனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவின் அலுவலகத்தில் இடம்பெற்ற முதலமைச்சர்களுக்கான கூட்டத்தின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்தக் கூட்டம் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தமை சுட்டிக்காட்டத்தக்கது,

இந்தக் கூட்டத்தை முதலமைச்சர்கள் புறக்கணித்தமைக்கான காரணம் தொடர்பில் கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டிடம் வினவிய போது தெரிவித்ததாவது,

தமது அமைச்சினூடாக மாகாண சபைகளுக்கான நிதியதிகாரங்களை கட்டுப்படுத்தி உள்ளூராட்சி மன்ற அமைச்சின் ஒரு திணைக்களமாக மாகாண சபைகளை மாற்றுவதற்கு அமைச்சர் பைஸர் முஸ்தபா கடந்த காலங்களில் பிரயத்தனங்களை முன்னெடுத்திருந்ததன் காரணமாக எந்த நம்பிக்கையில் அவரது தலைமையிலான கூட்டத்தில் பங்கேற்பதென்ற கேள்வி முதலமைச்சர் மத்தியில் இருந்ததாக கிழக்கு முதலமைச்சர் கூறினார்.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவை சுயாதீனமாக இயங்கக் கூடிய நிலை உருவாக வேண்டுமென்ற கோரிக்கையை முதலமைச்சர்கள் முன்வைத்து வரும் நிலையில் ஜனாதிபதி மற்றும் பிரதமரும் அதிகாரப் பகிர்வு குறித்து சாதகமான கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில் இவ்வாறான கூட்டங்களின் மூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களை முடக்குவதற்கு மத்திய அரசின் அமைச்சர்கள் முயற்சிப்பதாகவே இதனை முதலமைச்சர்கள் கருதுகின்றனர்.

அது மாத்திரமன்றி நிதி ஆணைக்குழு மற்றும் தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவுடன் மாதம் இரு முறை கலந்துரையாடுவதற்கு இதில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததுடன் பல முறை இந்த ஆணைக்குழுக்களுடன் கலந்துரையாடியும் தீர்வேதும் கிடைக்காததால் வெறும் காலத்தைக் கடத்தும் செயற்பாடாகவே இவற்றைக் கருத வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் கடந்த வருடத்திற்குரிய 35 சதவீதமான நிதியே இதுவரை மத்தியரசினால் வழங்கப்பட்டுள்ளதுடன் பல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவடைந்த நிலையில் மீதிநிதியைப் பெறுவதற்கு பற்றுச் சீட்டுக்களை வைத்துக் கொண்டு அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நிதி ஆணைக்குழு மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிதியைத் தராமல் இழுத்தடித்துக் கொண்டு கலந்துரையாடல்களுக்கு அழைப்பது காலத்தை வீணடிக்கும் செயற்பாடேயன்றி வேறென்னவென்று கருத முடியும்

சம்பள மற்றும் ஆளணிகள் தொடர்பான தேசிய ஆணைக்குழு உரிய வகையில் செயற்பட்டிருந்தால் இன்று கிழக்கில் பட்டதாரிகள் வெயிலிலும் மழையிலும் பாதைகளில் நின்று போராட வேண்டிய தேவையேற்பட்டிருக்காது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்,

அது மாத்திரமன்றி சம்பள மற்றும் ஆளணிகள் தொடர்பான தேசிய ஆணைக்குழு உரிய வகையில் செயற்பட்டிருந்தால் கிழக்கில் 5021 வெற்றிடங்கள் இருந்தும் பட்டதாரிகள் போராட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. இதேவேளை நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக மாகணங்களுக்கு உரிய அதிகாரங்களை மத்திய அரசு பறிக்க முற்படும் வேளையில் இவ்வாறான கூட்டங்களின் மூலம் மாகாண அரசாங்கங்களின் மேலும் அதிகாரங்களை நயவஞ்சகமான முறையில் பறித்தெடுப்பதற்கான சூழ்ச்சி நடக்கின்றதா என்ற சந்தேகமும் முதலமைச்சர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

எமக்கு 13 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வழங்காமல் எமக்குரிய நிதியினையும் முடக்கி வைத்துக் கொண்டு எம்மை செயற்படவிடாமல் கைகளை கட்டிவிட்டு எம்மை வெள்ளையானைகள் என குறைகூறுவதை மாத்திரம் இன்று சில அரசியல்வாதிகள் செய்துவருகின்றனர்.எமக்கு நியாயமாக வழங்க வேண்டிய நிதியினையும் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தையும் வழங்கினால் யார் வெள்ளை யானைகள் என மக்கள் விளங்கிக் கொள்வார்கள் என கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.



எனவே அமைச்சர்களுக்கோ அமைச்சுக்களுக்கோ மாகாண சபைகள் பொறுப்புக் கூற கடமைப்பட்டன அல்லவெனவும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமே மாகாண சபைகள் பொறுப்புக் கூற கடமைப்பட்டன என்பதை அனைத்து முதலமைச்சர்களும் தீர்மானித்துள்ளதாகவும் இதனடிப்படையில் விரைவில் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திப்பதற்கு முதலமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்

## காணவில்லை



கதிரவேல் வீரையா இந்திரசேனன் (82 வயது) நினைவாற்றல் குன்றியவர்.

நீர்கொழும்பு, பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை (22) காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன சந்தர்ப்பத்தில் நீல நிற சாரமும், இளமஞ்சள் மற்றும் இளநீல நிற கட்டமிடப்பட்ட மேற்சட்டையும் அணிந்திருந்தார்.

தகவல் அறிந்தவர்கள் 077 -2928348 / 0725346826 ஆகிய எண்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

## திருகோணமலை உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் இடமாற்றம்

**(கிண்ணியா கியாஸ் ஷாபி)**

திருகோணமலை மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மார்ச் 1 முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய இடமாற்றத்தின் மூலம் கிண்ணியாவில் கடமையாற்றிய நகரசபை செயலாளர் தம்பலகம பிரதேச சபைக்கும் தம்பலகம் பிரதேச சபை செயலாளராகக் கடமையாற்றியவர் திருகோணமலை நகர சபைக்கும் கிண்ணியா பிரதேச சபைச் செயலாளர் கிண்ணியா நகர சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமை புரிந்த எம். ஜே. அஸ்வத்கான் கிண்ணியா பிரதேச சபைக்கு புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு மேற்படி இடமாற்றத்தினைச் செய்துள்ளது.



நெல்லியகம அல் மதீனா பாலர் பாடசாலை சிறுவர் சந்தை கடந்த சனிக்கிழமை பாலர் பாடசாலை முன்றலில் இடம் பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.
( படம் கலாவெவ நிருபர் )

## பெயர் மாற்றம்

கண்டி மாவட்டத்தில் யடிநுவர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இல. 121ஈ கதுபலாத , வல்கம்பாய என்ற முகவரியில் வசிக்கும் பாத்திமா ஆகிய நான் எனது பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் பதியப்பட்டிருக்கும் முஹம்மது அஜீர் என்ற எனது பெயரை 01.01.2017 தொடக்கம் பாத்திமா என்று மாற்றிக் கொண்டேன் என்பதையும் இனிமேல் சகல ஆவணங்களிலும் பாத்திமா என்ற பெயரைப் பாவிப்பேன் என்பதையும் இலங்கை ஜனநாயக சோறுலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**- பாத்திமா**

## பெயர் மாற்றம்

கிண்ணியா - 01, றஹ்மானியா நகர், என்ற முகவரியில் வசித்து வரும் செல்வராசா செல்வராணி ஆகிய நான், (பிறப்புச் சான்றிதழ் பத்திர இல.1518) 2002.03.19 ஆம் திகதி எனது சொந்த விருப்பின் பேரில் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி அன்றிலிருந்து எனது பெயரை செல்வராசா ஜெஸீமா என மாற்றிக் கொண்டேன் எனவும் இனி சகல ஆவணங்களிலும் அவ்வாறே ஒப்பமிடுவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**- செல்வராசா ஜெஸீமா**


இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனான பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம்**

**திட்டம் - 02**

**ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இல. 3029-Sri**

எலிஹவுஸ் நீர்த்தேக்க வளாகத்தில் அமையவுள்ள உத்தேசிக்கப்பட்ட நீர் பம்பி நிலையத்தில் நீர்ப் பம்பித் தொகுதி மற்றும் அதனுடன் தொடர்பான இயந்திர, மின் மற்றும் கருவித்தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

ஒப்பந்த இலக்கம் : GCWWMIIP/ADB/PH/M&E/NCB/06

**கேள்விமனுக்கான அழைப்பிதழ் (IFB) - பின்னிணைப்பு 3**

இந்தப் பின்னிணைப்பானது எலிஹவுஸ் நீர்த்தேக்க வளாகத்தில் அமையவுள்ள உத்தேசிக்கப்பட்ட நீர் பம்பி நிலையத்தில் நீர்ப் பம்பித் தொகுதி மற்றும் அதனுடன் தொடர்பான இயந்திர, மின் மற்றும் கருவித் தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல் என்ற திட்டத்துக்கான சிறிய வேலைகளைப் பெறுகைக்கான கேள்விமனு கோரலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. பின்னிணைப்பு 01 ஆனது டெய்லி நியூஸ், தினமின, நவமணி ஆகிய பத்திரிகைகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை இணையத்தளம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணையத்தளம் ஆகியவற்றில் 2016 டிசம்பர் 05 மற்றும் 2017 ஜனவரி 23 ஆகிய திகதிகளில் முறையே பிரசுரிக்கப்பட்டது. பின்னிணைப்பு 03 இன் அனைத்து தேவைகளும், கேள்விமனு ஆவணம் மற்றும் அதன் விளைவான எந்தவொரு ஒப்பந்த ஆவணங்களினதும் பகுதியாகும்.

கேள்வினு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2017 மார்ச் 17, முற்பகல் 10 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விமனு ஆவணங்கள் சாதாரண வேலை நாட்களில் 2017 மார்ச் 16 வரை, முற்பகல் 09 மணி முதல் பிற்பகல் 03 மணி வரை விநியோகிக்கப்படும். கேள்விமனுவுக்கு முந்திய கூட்டம் பற்றிய தகவல்கள் இணைக்கப்பட்ட பின்னிணைப்பு 02 ஆனது, 2017 பெப்ரவரி 08 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டது.

மூல கேள்விமனு ஆவணம், பின்னிணைப்பு 01 மற்றும் பின்னிணைப்பு 02 ஆகியவற்றின் ஏனைய விதிமுறைகளிலும், நிபந்தனைகளிலும் எந்தவித மாற்றங்களும் இல்லை.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு (PPC) – Major**
**பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம்,**
**தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை**



# பாரிய காட்சியறை

**இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்**
**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**
இலக்கம்: 100, நவம் மாவத்தை, கொழும்பு 02.

## விளம்பர நிறுவனங்களுக்கான அழைப்பிதழ்

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் முழுமையாக அரச உரித்துடைய, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழ் இயங்குகின்ற, நன்கு நிறுவப்பட்ட நிறுவனமாகும்.

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம், 45 வருடங்களுக்கும் மேலாக, வியாபாரத் துறையில் முன்னணியில் நிற்கின்றது. அத்தோடு, தற்போது இலங்கை சந்தையில் நன்கு நிறுவப்பட்ட பொருட்களின் ஏக முகவர் / விநியோகஸ்தராக உள்ளது.

எமது எண்ணக்கருவை பெருமளவில் வானொலி, தொலைக்காட்சி வர்த்தக விளம்பரங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் அல்லது முடியுமான மற்றும் ஊக்குவிப்பு செயற்பாடுகள் மூலம் ஊக்குவிப்பதற்கு, வாய்ப்பை திறந்து விடுவதோடு, உங்களிடமிருந்து முன்மொழிவுகளையும் கோருகின்றோம்.

எமது பண ஒதுக்கீடு மற்றும் ஏனைய கட்டணங்கள், உங்களது எண்ணக்கரு மற்றும் விளம்பர பிரசாரத்தின் விளைவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பேசித் தீர்மானிக்கப்படும். உங்களது துரிதமான பதிலை நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் | : | 011 2322030 |
| பொது | : | 011 2422341 / 2440880 |
| தொலைநகல் | : | 011 2447970 |
| மின்னஞ்சல் | : | mega@stc.lk |
| இணையம் | : | www.stcgeneral.com |

**தலைவர்,**
**இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்,**
**இலக்கம்: 100, நவம் மாவத்தை, கொழும்பு 02.**

**குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடையும் 45 வருட பயணம்**




# பதுக்கல் பற்றிய கண்ணோட்டம்



**கேள்வி:** பதுக்கல் பற்றி இஸ்லாம் கூறுவது என்ன? இதில் பிரதான உணவுப் பொருட்கள் மாத்திரம் அடங்குமா? அல்லது உப உணவுப் பயிர்களான கோப்பி, மிளகு, புளி போன்றவைகளும் அடங்குமா? விளக்கம் தேவை.

**பதில்:** விலையேற்றம் கருதிப் பண்டங்களைப் பதுக்குவது ஹராமாகும். பேராசையும், பிறர் நலன் பேணாத் தன்மையுமே ஒருவனை இத்தீய செயலைச் செய்யத் தூண்டுகின்றது. பதுக்கலினால் மக்களுக்கு எத்தகைய அசௌகரியங்கள் ஏற்படும் என்பது தெளிவானதே. இவற்றைக் கருத்திற்கொண்டே இஸ்லாம் பதுக்கலைத் தடை செய்துள்ளது. பதுக்கலைக் கண்டிக்கும் சில நபி மொழிகளைக் கீழே நோக்குவோம்.

பதுக்கியவன் பாவி. (அபூதாவூத், முஸ்லிம்)

உணவுப் பொருளை நாற்பது நாட்களுக்குப் பதுக்கியவன் அல்லாஹ்வை விட்டும் நீங்கிக் கொள்கிறான். அல்லாஹ்வும் அவனை விட்டு நீங்கிக் கொள்கிறான். (அஹ்மத், அல்ஹாகிம்)

மிகக் கெட்ட அடியான் பதுக்கற்காரனே. விலையிறக்கத்தைக் கேட்டு அவனுக்குக் கவலையைக் கொடுக்கிறது. விலையேற்றத்தைக் கேள்வியுற்றாலோ மகிழ்ச்சியுறுகிறான். (றஸீன்)

அனைத்து வகையான பதுக்கல்களும் ஹராமானவையல்ல. பதுக்கல் ஹராமானதாகக் கொள்ளப்படுவதற்கு அறிஞர்கள் மூன்று நிபந்தனைகளைக் குறிப்பிடுகின்றனர்.

**அவையாவன:**

1. பதுக்கிய பொருள் பதுக்கியவனினதும் அவனது பராமரிப்பிலிருப்போரினதும் ஒரு வருடத் தேவைக்குப் போதுமான அளவை விடவும் அதிகமாக இருத்தல் வேண்டும். ஏனெனில், ஒருவருக்கு ஒரு வருடத்துக்குத் தனக்கும் தனது குடும்பத்துக்கும் தேவையான பொருளைச் சேமித்து வைக்க அனுமதியுண்டு.

2. குறித்த பொருளின்பால் மக்களுக்குள்ள கடுந்தேவையைக் கருத்திற் கொண்டு, கூடிய விலையில் விற்க வேண்டுமென்ற நோக்கில், பொருளின் விலையேற்றத்தை எதிர்பார்த்துப் பதுக்கி இருத்தல் வேண்டும்.

3. பதுக்கப்பட்ட பொருளின் பால் மக்களுக்குத் தேவையுள்ள வேளையில், பதுக்கி இருத்தல் வேண்டும். மாறாக பல வியாபாரிகளிடம் குறித்த பொருள் இருந்து, மக்களுக்கு அதன் பால் தேவையில்லாதபோது அதனைத் தேக்கி வைப்பதும், சேமித்து வைப்பதும் தடை செய்யப்பட்ட பதுக்கல் அல்ல. ஏனெனில், இதனால் மனிதருக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படுவதில்லை.

எத்தகைய பொருட்களைப் பதுக்குவது கூடாது என்பதில் இமாம்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

சில அறிஞர்களின் கருத்துப்படி ஒருவர் தனது சொந்தத் தானியங்களையோ உற்பத்திகளையோ தேக்கி வைப்பது பிழையானதல்ல.

இமாம்களான ஷாபிஈ, அஹ்மத் ஆகிய இருவரினதும் அபிப்பிராயப்படி அடிப்படையான அத்தியாவசிய உணவுப் பண்டங்களில் மாத்திரமே பதுக்கல் ஹராமானதாகக் கொள்ளப்படும்.

மேலும் பல அறிஞர்கள் அனைத்துப் பண்டங்களிலும் (மேலே கண்ட நிபந்தனைகள் காணப்படுமிடத்து) பதுக்கல் செய்வது ஹராமானதாகும் எனக் கூறுகின்றனர்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் குடிவரவுக் கொள்கை மற்றும் முஸ்லிம் எதிர்ப்பு செயற்பாடுகளுக்கு எதிராக பொதுமக்களால் நிவ்யோர்க் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டமொன்றின்போது முஸ்லிம் பெண்கள் பாதையில் தொழுகையில் ஈடுபட்டதை படத்தில் காணலாம்.

# வட்ஸ்அப்பும் உடல்நலமும்

(நிலூபா நிஹாப்தீன்)

நமது உடல் ஓர் அற்புத படைப்பு. அதில் ஆச்சரியப்படத்தக்க பல அம்சங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் நமது உடலில் நேரத்தை தானாகவே ஒழுங்குபடுத்தும் உயிரியல் நேர முறைமை. இதனை வழி நடத்தும் ஒரு சுரப்பி நம் ஒவ்வொருவரின் தலையிலும் உள்ளது. அதுதான் பினியல் சுரப்பி.

கடலை உருண்டை வடிவில் இருக்கும் இந்த பினியல் சுரப்பி பார்வை நரம்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த பினியல் சுரப்பி ஓர் அரிய பொருளை தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சுரக்கிறது. அதுதான் மெலடோனின். இந்த அதிசய அரிய பொருளின் பலன் மகத்தானது. புற்று நோயைக் குணப்படுத்தும் இயற்கை மருந்து இந்தப் பொருளில் இருக்கிறது என்று இன்று மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுப்பிடித்துள்ளார்கள்.

மெலடோனின் சுரக்க வேண்டும் என்றால், ஒரே ஒரு நிபந்தனை. இரவின் இருளாக இருக்க வேண்டும். ஆம்! இரவின் இருளில்தான் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்கும். அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பார்வை நரம்பு மூலமாக அது இரவின் இருளை அறிந்து கொள்ளும். ஒவ்வொரு நாளும் இஷாவுக்குப் பிறகு, இருளில் சுரக்கும் மெலடோனின், நமது இரத்த நாளங்களில் பாய்ந்தோடும். நமது கண்கள் வெளிச்சத்தில் பட்டுக் கொண்டிருந்தால் பினியல் சுரப்பி மெலடோனினை சுரக்காது.



பினியல் சுரப்பி மெலடோனினை இஷாவுக்குப் பிறகு சுரக்க ஆர்மபித்து ஃபஜருக்கு இரண்டு மணி நேரத்துக்கு முன் நிறுத்தி விடும். இரவு நீண்ட நேரம் கண் விழித்திருந்தால் நாம் புற்று நோயைக் குணப்படுத்தும் மெலடோனின் என்ற இயற்கை மருந்தை இழந்தவர்களாக ஆவோம். எனவே இரவு முன்கூட்டியே உறங்கி அதிகாலையில் எழுவது புற்று நோயைத் தடுக்கும் என்று இன்று மருத்துவ உலகம் கூறுகிறது!!

அதே போன்று, அதிகாலையில் காற்று வெளி மண்டலத்தில் ஓஸோன் நிறைந்திருக்கும். ஒரு மனிதன் அதிகாலையில் எழுந்து நடமாட ஆரம்பித்தால், இந்தஓஸோன் காற்றை அவன் சுவாசிப்பான். இது நமது உடலிலுள்ள நோய்களைக் குணப்படுத்தி, நம் ஆயுளை அதிகரிக்கும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இரவு முன்கூட்டியே உறங்குவதால், மெலடோனின் கிடைக்கிறது. அதிகாலையில் எழுந்து அலுவல்களைத் துவங்குவதால், ஓஸோன் கிடைக்கிறது. நமது உடலின் ஆரோக்கியம் அனைத்தும் இவற்றில் அடங்கியிருக்கிறது. இதனைத்தான் 1400 ஆண்டுகளுக்கு முன்பே அண்ணல் நபிகளார் அவர்கள் அழகுற எடுத்துக் கூறினார்கள். அற்புதமாக வாழ்ந்தும் காட்டினார்கள்! அவர்களது வாழ்க்கை முறை இஷாவுக்குப் பின் உடனே உறங்கி முன் அதிகாலையில் தஹஜ்ஜத்துக்கு எழும் வழக்கம் உடையதாக இருந்தது. அதிகாலையின் சில மணி நேரங்கள் அந்த நாளின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கக் கூடியவையாக இருக்கின்றன. அதிகாலையில் எழும்போது, நமது மூளையும், இன்னபிற உறுப்புகளும் பூரண ஓய்வு பெற்று வேலை செய்ய தயாராக இருக்கும்.

அந்த நேரத்தில் செய்யும் பணிகள் அனைத்தும் திறமை மிக்கதாகவும், ஆற்றல் அழுத்தம் மிக்கதாகவும் திகழும். எனவே முன் எழுந்து முன் மறையும் அதிசய மெலடோனினைப் பெறவும், அதிகாலைப் பொழுதின் ஓஸோனைப் பெறவும், அனைத்துக்கும் மேலாக அல்லாஹ்வின் அருளைப் பெறவும் ஒரு முஸ்லிம் நேரகாலத்துடன் தூங்கி, அதிகாலையில் எழ வேண்டும்.






## சுய்யம்

**தேவையான பொருட்கள்:**

* கோதுமை மா - 1 கப்
* தண்ணீர் - தேவையான அளவு
* சீனி- 1 கப்
* கடலைபருப்பு - 1 கப்
* துருவிய தேங்காய் - 1 கப்
* ஏலக்காய் பொடி - 1 தேக்கரண்டி
* நெய் - 1 தேக்கரண்டி

**செய்முறை**

கடலைபருப்பை தண்ணீர் சேர்த்து வேக விடவும். ஓர் அகண்ட பாத்திரத்தில் சீனி எடுத்து தண்ணீர் விட்டு உருக்கவும். இப்போது அதை வடிகட்டி எடுத்து வைக்கவும். அதே பாத்திரத்தில் வேகவைத்த கடலை பருப்பு சீனிப் பாகு, துருவிய தேங்காய், சிறிது உப்பு சேர்த்து நன்றாக வேக விடவும். அது கெட்டியாக வரும்போது ஏலக்காய் பொடி மற்றும் நெய் சேர்த்து கலந்து வைக்கவும். பின்னர் அவற்றை சிறு உருண்டையாக உருட்டி வைக்கவும். ஒரு கிண்ணத்தில் மாவை எடுத்து தண்ணீர் விட்டு பஜ்ஜி மாவு பதத்திற்கு கலந்து வைக்கவும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு, உருட்டி வைத்த உருண்டையை மாவில் முக்கி எண்ணெய்யில் போட்டு பொறித்து எடுத்தால், சுவையான சுய்யம் ரெடி!!




# உடல் வரட்சி
## பிரசவத்தை சிக்கலாக்கும்

கர்ப்பிணிகள் ஒரு நாளைக்கு குறைந்தது 2 லீட்டர் தண்ணீராவது குடிக்க வேண்டும். அப்போது தான் உடலில் நீர்ச்சத்து அதிகமாக இருக்கும். இதன்மூலம் பிரசவம் எளிதாக இருக்கும்.



மேலும், தண்ணீர் குடிக்க முடியவில்லை என்றால் தேவையான அளவு பழச் சாறு அருந்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் சாதாரணமாக இருக்கும் போது உடலில் இருக்கும் சக்தியானது, கர்ப்பமாக இருக்கும் போது இருக்காது. ஏனெனில் அப்போது உண்ணும் உணவுச் சத்துக்கள் கருவில் இருக்கும் குழந்தைக்குச் செல்லும்.

தேவையான அளவு ச்தண்ணீர் அருந்தவில்லை என்றால் பிரசவத்தின் போது உடலில் இருக்க வேண்டிய நீர்த்தன்மையை நீண்ட நேரம் தக்க வைக்க முடியாமல் போய்விடும். மேலும், கருவில் இருக்கும் குழந்தை கருப்பையில் இருக்க முடியாமல் விரைவில் வெளியே வந்துவிடும். இதைத்தான் குறைப்பிரசவம் என்கிறோம்.

சாதாரணமாக இருக்கும் போது உடலில் இருந்து வெளியேறும் வெப்பமானது, பிரசவத்தின் போது வெளியேறாது. உடலிலேயே தங்கிவிடும். இதற்கும் நீர்ச்சத்து இல்லாததே காரணமாகும். ஆகவே, உடலில் உள்ள வெப்பத்தை சரியாக வைத்துக்கொள்ள அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும். வெப்பம் உடலிலேயே இருந்தால் காய்ச்சல் வரும்.

உடல் வரட்சியானது மலச்சிக்கல் மற்றும் தாய்ப்பால் சுரப்பில் குறைபாடு போன்றவற்றை ஏற்படுத்தும். சிறுநீரகத்தில் பிரச்சினையை உண்டாக்கும்.

கர்ப்ப காலத்தில் அதிகமாக தண்ணீரை குடித்து உடல் வரட்சி இல்லாமல் பார்த்துக்கொண்டால் தாய், சேய் ஆகிய இரு உயிருமே நலமாக ஆரோக்கியமாக இருக்கும்.

# தூங்கி எழும் போது
## புத்துணர்வுடன் இருக்க...

இரவில் படுக்கும் முன்பும், காலையில் எழுந்த பின்பும் தண்ணீர் குடிக்கும் பழக்கத்தைக் கொள்ளுங்கள். இது ஆரம்பத்தில் சற்று கடினமாகத் தான் இருக்கும்.

ஆனால் இப்படி நீரைக் குடிப்பதால் ஒரு முக்கிய நன்மை உள்ளது. அது தூங்கி எழுந்ததும் வாய் துர்நாற்றம் வீசுவதைத் தடுக்கும்.

இரவில் படுக்கும் முன் முகத்திற்கு கடலை மாவு மற்றும் பால் சேர்த்து மாஸ்க் போட்டு ஊற வைத்து கழுவி தூங்கினால், பாதிக்கப்பட்ட சரும செல்கள் புதுப்பிக்கப்படுவதோடு, சரும ஆரோக்கியமும் தக்க வைக்கப்படும்.

இரவில் படுக்கும் முன்னும், காலையில் எழுந்த பின்பும் முகத்தை குளிர்ந்த நீரில் நன்கு கழுவுங்கள். இந்த ஒரு செயலே சருமத்தில் உள்ள அழுக்குகளை வெளியேற்றி, முகத்தை பொலிவாகக் காட்டும்.

முக்கியமாக கைபேசி, மடிக்கணனி போன்றவற்றை அதிகம் பயன்படுத்துவதை நிறுத்துங்கள். அதுவும் இரவில் படுக்கும் முன் இவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தாலே, இரவில் நல்ல நிம்மதியான தூக்கத்தைப் பெற்று முகத்தைப் பொலிவோடு வைத்துக் கொள்ளலாம்.



# வெங்காயம் நறுக்கும் போது கண்ணீர் வராமல் இருக்க....

வெங்காயத்தை வெட்டுவதற்கு முன்னர், அதை 10 - 15 நிமிடங்கள் குளிர் சாதனப்பெட்டியில் வைத்து விடுங்கள். இதனால் சுவையும் எந்த பாதிப்பும் அடையாது.

வெட்டுவதற்கு முன்னர் நீரில் முக்கி எடுத்துவிட்டு வெங்காயத்தை வெட்டுங்கள். இதனால் சற்று சுவையில் மாற்றம் ஏற்படலாம்.

வெங்காயம் வெட்டும் போது அருகே ஆவி வெளிப்படும் அளவில் சுடுநீர் வைத்து நறுக்கினால் கண்ணீர் வராது.

இறுக்கமான கண்ணாடி அணிந்துக் கொண்டு வெங்காயம் வெட்டுவதால் கண்ணீர் வராமல் தடுக்க முடியும்.

வெங்காயம் நறுக்கும் போது அருகே சிறிய மெழுகுவர்த்தியை பற்ற வைத்து நறுக்கினால் கண்ணீர் வராது. மெழுகில் இருந்து வெளிவரும் கேஸ் கண்ணீர் வருவதை தடுக்கிறது.

# முகப் பருவை கிள்ளாதீர்கள்

முகப்பருவிலுள்ள சீ லுகஷடன் பக்டீரியாக்களும் சேர்ந்து இருப்பதால், அதை கையால் கிள்ளும் போது, இதுவரை மேற்பரப்பில் பாதிக்கப்பட்டிருந்த சருமத் துளைகள் ஆழமாக பாதிக்கப்படும். இதனால் கிள்ளிய அந்த பரு மிகவும் தீவிரமாகக் கூடும்.

அசுத்தமான கையால் முகப்பருவை தொடும் போது, முகப்பருவில் உள்ள பக்டீரியாக்களின் அளவு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இதனால் முகம் முழுவதும் முகப்பரு வரும் வாய்ப்பு அதிகம்.

கிள்ளுவதால் அதைச் சுற்றிய பகுதி கடுமையாக பாதிக்கப்படுவதால், அந்த முகப்பரு மறையும் போது நீங்கா தழும்புகளை விட்டு செல்லும் வாய்ப்பும் அதிகரிக்கும்.



# காலை உணவு உண்ணவில்லையா?

காலையில் சாப்பிடாமல் இருந்தால் குறிப்பாக பெண்களுக்கு, இன்சுலின் சுரப்பதில் பாதிப்புகள் உண்டாகி, நீரிழிவு நோய் உண்டாக வாய்ப்பு. கூந்தல் கற்றைகளுக்கு தேவையான விட்டமின்களுக்குளைம் புரத உணவுகளாலேயே அளிக்க முடியும். காலையில் உணவை தவிர்ப்பதால் போதிய புரதம் கிடைக்கப்பெறாமல் முடி உதிர்வு ஏற்படும்.

ஒற்றைத் தலைவலி எனப்படும் மைக்ரேனால், காலை உணவை தவிர்ப்பவர்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். காலையில் சாப்பிடாமல் இருக்கும்போது சீனியின் அளவு குறைந்து, இரத்த அழுத்தம் அதிகரிக்கும். இதனால் ஒற்றை தலைவலி உண்டாகும்.

காலை உணவை தவிர்ப்பவர்களுக்கு உடல் பருமன், இரத்த அழுத்தம் மெல்ல உருவாகி இதயத்தின் செயல்கள் பாதிக்கப்பட்டு இதய நோய்கள் உருவாகும்.

ஒரு நாள் உழைக்க தேவையான சக்தி மற்றும் செல்களுக்கு தேவையான சத்துக்கள் காலை உணவிலிருந்தே பெறப்படுகின் றன. ஆகவே காலை உணவை எக்காரணம் கொண்டும் தவிர்ப்பது மிகவும் தவறு.



# மருத்துவ பீட நுழைவை இலகுபடுத்திய

# பதியுதீன் மஹ்மூதின் நடவடிக்கை

ஏ.ஸீ.எம். ஜிப்ரி, காலி





சைட்டம் மருத்துவக் கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று ஒரு சாராரும், தடை செய்ய வேண்டும் என்று மற்றுமொரு சாராரும், மருத்துவப் பட்டம் வழங்குவதற்கு எந்த தகைமையையும் சைட்டத்திற்கு கிடையாது என்று இன்னுமொரு சாராரும் பல ஆர்ப்பாட்டங்கள் செய்தும், குழப்பங்களை ஏற்படுத்தி பல்கலைக்கழகங்களின் சுமுகமான போக்கை தடுப்பதற்கு முயற்சிகள் பல மேற்கொண்டனர்.

ஆனாலும், சைட்டத்திற்கு எதிரான வழக்கில், நீதி சைட்டத்திற்கு சாதகமானதாகவே அமைந்தும், போராட்டம் வேறு உருவில் உருவெடுத்ததனால் ஜனாதிபதியின் தலையீட்டால், இரு தரப்பினரதும் பிரச்சினைகளை சம்பூரணமாக ஆராய்ந்து, பேச்சுவார்த்தை நடாத்தி முடிவு எட்டும் வரை கொஞ்சம் அமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே.

கல்வி மாணவர்களின் ஏகபோக உரிமை. இதனைத் தடை செய்தல் பாரிய குற்றம். கடந்த ஆட்சி காலத்தில் இந்த மருத்துவக் கல்லூரி நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே உருவாக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. குறைந்த தகைமைகளுடன் பணத்திற்காக சைட்டம் மாணவர்களை மருத்துவர்களாகப் பட்டம் வழங்கி மருத்துவர்களின் (அரச) பல்கலைக்கழகங்களில் பட்டத்தை சவாலுக்குட்படுத்தும் செயல் என்றும் கூறப்படுகின்றது. தற்போது அரச பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு, வெளியேறியவர்களும், தற்சமயம் பயின்று கொண்டிருப்பவாகளும் மூன்று ஏ சித்தியுடன்தானா? என்றால், இல்லை, மாவட்ட தரப்படுத்தலில் குறைவான சித்தியுடையோரும் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும், அதனைப் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் சைட்டம் மட்டும் மூன்று எஸ் சித்தி பெற்றோரையும் பணத்திற்காக உள்வாங்கி, மருத்துவர்களாக்க முயலுகின்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

1970 களுக்கு முன்னர் வைத்தியத் துறைக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும்போது, எழுத்துப் பரீட்சையில் மிகத் திறமையுடன் நான்கு பாடங்களிலும் சித்தியடைந்த போதிலும், செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்தால், மட்டுமே வைத்தியத் துறைக்கு உள்வாங்கப்பட்டதை இன்று மறந்து விட்டார்கள் போலும்.

இந்த செயல்முறைப் பரீட்சையின் போது, பாரிய மோசடிகள் காரணமாக ஏழை மாணவர்களும், சிறுபான்மை ஒரு சாராரும் பாதிக்கப்பட்டதை சில, பல புத்திஜீவிகள் அன்று கல்வி அமைச்சராக பணிபுரிந்த கலாநிதி மர்ஹூம் பதியுதீன் மஹ்மூதிடம் முறையிட்டதன் பயனாக, செயல்முறைப் பரீட்சையை இரத்துச் செய்து எழுத்துப் பரீட்சைப் பெறுபேறின் அடிப்படையிலும், பின்தங்கிய மாவட்டங்களில் இருந்தும் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கும், மருத்துவத் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டனர். இதன் மூலம் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை போன்ற தலை தலைநகரங்களின் மாணவர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த மருத்துவ பீடம், நான்கு பாடங்களுக்குப் பதிலாக மூன்று பாடங்களுடன் சித்தியடைந்தும், பின்தங்கிய மாவட்டங்களில் இருந்தும் மாணவர்கள் உள்வாங்கப்பட்டதன் பயனே, கிராமப் புறங்களில் எல்லாம் வைத்தியர்கள் உருவாகினர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

பின்தங்கிய பகுதிகளிலிருந்து குறைவான புள்ளிகளுடன் உள்வாங்கப்பட்டவர்கள் இன்று சிறந்த வைத்தியர்களாகப் பிரகாசிக்கின்றனர். சந்தர்ப்பம் ஆக்கிக்கொடுத்தால் அதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டால், திறமையை வெளிக்கொணர்வது சுலபம். மாணவர்களின் முன்னேற்றத்துக்கு தடை போடுவது மனித தர்மமாக முடியாது.

சைட்டம் பணம் பறிக்கிறது என்று அலட்டிக்கொள்பவர்கள் தனியார் மருத்துவமனைகளில் செனலிங் செய்து பிழைப்பதையே விரும்புகின்றனர். அரச வைத்தியசாலைகளில் பணியை ஒழுங்காக நிறைவேற்றுகிறார்களா? என்பது கேள்விக் குறி. அரச வைத்தியசாலைகளில் ஒரு சில நோயளர்களைப் பார்த்து களைப்படையும் வைத்தியர்கள், தனியார் மருத்துவமனைகளில் நூற்றுக்கணக்கான நோயாளர்களைப் பார்த்தாலும் களைப்படைவதில்லை.

இதற்குக் காரணம் பணம் என்றால், சைட்டம் வழங்கும் பட்டம் தரமானதா? என்பதை ஆராய்வதும், அதனை தரமானதாக ஆக்கிக் கொள்வதற்கு ஆலோசனை வழங்க வேண்டியதும் உயர் கல்வி அமைச்சின் பொறுப்பு. ஜனாதிபதியின் பேச்சுவார்த்தை முடிவு ஒரு நல்ல முடிவு.

ஒரு தனியார் வைத்தியக் கல்லூரியை மூட வேண்டும் என்று கோஷம் எழுப்புவர்களுக்கு மற்றுமோர் சவால் காத்திருக்கிறது.

வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் புலம் பெயர்ந்தோர் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புடன் வெகு விரைவில் மருத்துவக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது. நாடும் மக்களும் நலம் பெற நல்லதே நடக்கட்டும்!

★★★



# சட்ட ஆட்சியிலிருந்து சட்டத்திலான ஆட்சிவரை

# பகிரங்கத் தெரிவுக்கண்ணோட்டம்

சூரி ரத்னபால

(கடந்த வார தொடர்ச்சி...)

சட்டம் மற்றும் முடிக்குரிய கட்டளை ஆகியவற்றுக்கிடையிலான தெளிவான வேறுபாடு நவீன அரசியலமைப்புத் தத்துவம் உதயமாகிய இங்கிலாந்தின் பழைய அரசியலமைப்பின் அத்திவாரமாக அமைந்தது. அது ஆளுநர் ஆட்சியின் ஆதியான தத்துவமாகும். இத்தகைய கட்டளைகள் வினைத்திறனுக்குரியவாறு Hayek என்பவரால் கூறப்பட்ட thesei எனும் பிரதான பொதுமைப்படுத்தப்பட்ட நிர்வாகக் கட்டளைகள் மற்றும் சிவில் ஊழியர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதுமாகும். இச்சட்டம் ஆட்சி செய்பவரின் எழுந்தமான தத்துவத்திற்கு அப்பால் சென்று சனசமூகத்தில் காணப்பட்டதுடன் அவர்களின் உண்மையான அல்லது நம்பத்தக்க சம்மதத்துடன் மாத்திரமே மாற்றப்பட வேண்டியுமிருந்தது. பொதுச் சட்டத்தின் கீழ் உரிமைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கான தத்துவமாகிய நியாயாதிக்கத்தின் (Jurisdicto) நடைமுறைப்படுத்தலால் அத்தகைய மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. (McIlwain 1947, 77) அவதானிக்கப்பட வேண்டிய விமர்சனத்துக்குரிய விடயம் என்னவென்றால், எட்டாவது ஹென்றி மன்னர் அவ்வாறு செய்து பாராளுமன்றத்தை வலுக்கட்டாயப்படுத்துவதற்கு சிறிது காலம் முகாமைத்துவம் செய்த வேளையில் Jurisdicto என்பதை அரசியலமைப்பு ரீதியாக இடமாற்றஞ் செய்வதற்கு அல்லது மன்னராட்சிக்கு கையளிப்பதற்கு இயலாமற்போனது என்பதாகும். எட்டாவது ஹென்றி மன்னரின் அத்தகைய வாசகங்களின் கீழ் பாராளுமன்றம் அனுமதிக்கும் சட்டவாக்கத் தத்துவத்திற்கான நிறைவேற்றுத் துறை மற்றும் பாராளுமன்றத்திற்குரிய சட்டங்களை மீறும் சட்டங்கள் உட்பட அனைத்தும் முறையான அரசியலமைப்பு ரீதியில் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

எனவே தேர்ந்தெடுக்கப்படாத மன்னராட்சிக்கு Jurisdicto வினது ஏதேனும் பகுதியை ஒப்படைப்பது உண்மையில் தீங்கு விளைவிப்பதாக இருந்தது. இங்கிலாந்து மற்றும் பெரிய பிரித்தானியா ஆகியவற்றின் அரசியலமைப்பு வரலாறு 20 ஆம் நூற்றாண்டுவரை பல வழிகளில் பொதுச் சட்ட நீதிமன்றங்களும் பாராளுமன்றமும் இணைந்து முடிக்குரிய அதிகாரத்திலிருந்து Jurisdictoவை கைப்பற்றி தம்வசம் வைத்திருப்பதற்கான போராட்டக்கதையாகும்.

அதன்பின், பாரிய மறுசீரமைப்புகள் (சீர்திருத்தங்கள்) மற்றும் பொதுசன ஜனநாயகம் ஆகியன உருவாகின. அவ்வாறு நிறைவேற்று அதிகார மூலங்கள் மன்னராட்சியிலிருந்து தேர்தல் தொகுதிக்கும், மனிதவுரிமையிலிருந்து பாராளுமன்றத்தின் நம்பிக்கைக்கும் மாற்றப்பட்டன. நிறைவேற்று அதிகாரத்தின் தகவல் தேக்கங்கள் அனைத்தும் மன்னராட்சியிலிருந்து பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு கைமாற்றப்பட்டது. மேலும் பகிரங்க நிதியும் அவ்வாறே இடம்பெற்றன. பாராளுமன்ற உறுப்பினர்களும் தேர்தல் தொகுதிகளும் நிறைவேற்றுத்துறை தொடர்பான தமது பாரம்பரிய அச்சம் மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவற்றை இழந்துவிட்டன. அவை தற்போதைய காலக்கிரம தேர்தல்கள் மூலமாக அகற்றப்படக்கூடியதாக இருந்தது. இறுதியாக நிறைவேற்று அதிகாரமானது வாக்குகளை பரிமாற்றம் செய்யுமளவிற்கு நன்மைபயக்கும் விதத்தில் அதன் இயலுமையைப் பெற்றுவிட்டது. எனினும், அரசாங்கங்கள் குறிப்பிடத்தக்க அளவுத் திட்டத்தில் இவற்றைப் பரிமாற்றஞ் செய்வதற்குமுன் பிரஜைகள் எனும் சட்ட ஆட்சியின் முக்கிய நபரைக் கையாளவேண்டும். அதாவது பிரஜைகள் பொதுச் சட்டம் மற்றும் தனிநபர் சாராத சட்டங்களுக்கு மட்டும் கட்டுப்பட வேண்டும். எனவே நாட்டின் பொதுச் சட்டத்தில் தத்துவார்த்த மாற்றங்களை ஏற்படுத்தி வாக்குகளை வெற்றி கொள்ளச் செய்ய முடிந்தது. எனினும் தொகுதிவாரியாக பணமாற்றம் செய்வதற்கு அல்லது உரையாடல் போன்ற பொதுமக்கள் விடயத்தில் அக்கறை செலுத்துபவர்களாக இருப்பினும் குறித்த தேர்தல் தொகுதிகளுக்கு நன்மைகளை வழங்குவதன் மூலம் வாக்குகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் இலகுவாகும். இத்தகைய தேர்தல் தொகுதிகளின் கோரிக்கைகள் பொதுச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுவது கடினமாகும். எனவே விசேட ஒதுக்கீடுகள் மற்றும் உரிமை மறுப்புகள் மற்றும் சட்ட ஆட்சியைத் தோற்கடிக்கச் செய்து நிலையான உரித்துரிமை சீராக்கல்கள் ஆகியன இவற்றிற்குத் தேவைப்படுகின்றன.

(தொடரும்)



# கிண்ணியாவில் டெங்கு நோயினால் மூவர் பலி

(கிண்ணியா கியாஸ் ஷாபி)

கிண்ணியா, 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த யுவதி ஒருவர் டெங்கு நோயின் தாக்கத்துக்குள்ளாகி கடந்த சனிக்கிழமை மரணமானார். 20 வயதான எம்.ஜே. இப்திசாம் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவரது தாயும் டெங்கு நோய்க்குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய மாணவியான இவர் இரண்டாவது தடவையாக உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு கிண்ணியா, மாஞ்சோலைச் சேனை, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் டெங்கு காய்ச்சலின் தாக்கத்துக்கு உள்ளாகி நேற்று மரணமானார். திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஏழு வயதான ஜெஸாத் ஹாதீக் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கிண்ணியா பிரதேசத்தில் இந்த வருடம் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை டெங்கு காய்ச்சலினால் மூவர் பலியாகியிருப்பதாகவும் 350 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பெரும்பான்மையினரின் விருப்பின்றி புதிய அரசியலமைப்பு அமுலாகாது

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல



(மாவத்தகம நிருபர்)

நாங்கள் இனம்,மதம் போன்ற மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக அரசியல் செய்யப் போனால் நாடு நாளுக்கு நாள் பின்நோக்கியே செல்லும் என உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மேலும் இந்த நாட்டில் பெரும்பான்மையான சிங்கள மக்களுக்கு புதிய அரசியலமைப்பு கொண்டு வருவது தொடர்பாக விருப்பமில்லை, ஆனால் தமிழ் அரசியல் கட்சிகள் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கண்டி அருப்பலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:

புதிய அரசியல் அமைப்பு தொடர்பாக அரசாங்கம் சொல்லும் செய்தி யாதெனில் புதிய அரசியல் அமைப்பு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டாலும், மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பில் பெரும்பான்மையினரின் விருப்பம் மேலதிகமாக கிடைக்கும் வரை புதிய அரசியல் அமைப்பு சட்ட மூலத்தை ஒரு போதும் அரசாங்கம் நடை முறைப்படுத்தப் போவதில்லை .

அதாவது மாகாண சபை ஆரம்பித்த காலத்தில் மாகாண சபை பற்றிய தெளிவு மக்களை சென்றடையவில்லை, அது பற்றி இந்த நாட்டு மக்களுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்தவுமில்லை. அவ்வாறு அதனை மேற்கொள்ள அரசு தவறியதினால் பின்னர் அதனால் நாட்டில் பல பிரச்சினைகள் உருவாக அது காரணகர்த்தாவாக அமைந்திருந்தது.

ஆகவே எதிர்காலத்தில் நாட்டு மக்கள் அவ்வாறான ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க மாட்டார்கள் என்பது எனது திண்ணமாகும். மேலும் பாராளுமன்றத்தைப் பிரதிநித்துவப்படுத்தும் சகல கட்சிகளுடைய பங்களிப்புடன் புதிய அரசியலமைப்பு திருத்த நடவடிக்கைகளுக்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. ஆகவே சகல இன மக்களையும் ஒன்றிணைத்து நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான அரசியலமைப்பை இந்த நாட்டில் அறிமுகப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் போது சிங்கப்பூர். மலேசியா, ஆகிய நாடுகளில் பின்னடைந்திருந்தன. ஆனால் தற்போது அந்நாடுகள் அதீத மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அதற்கு இன ஒருமைப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுதான் காரணமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்டி வர்த்தக நிலையங்களில் காலாவதியான அரிசி மூட்டைகள்

(குருநாகல் இக்பால் அலி)



அக்குரணை பிரதேசத்திலுள்ள இரு தனியார் வர்த்தக நிலையங்களில் நுகர்வோர்களுக்கு விற்பனைக்குதவாத காலாவதியான ஒரு தொகை அரிசி மூட்டைகளை கண்டி மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் நேற்று முன்தினம் கண்டெடுத்துள்ளனர்.

இவ்வாறு அதிகாரிகளினால் கண்டெடுக்கப்பட்டுள்ள அரிசி மூட்டைகளில் 1040 கி.கி நிறை கொண்டுள்ளதாக தெரியவருகிறது. காலாவதியான திகதி கடந்த 2017-ஜனவரி 25ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேற்படி பிரதேசத்திலுள்ள குறித்த இரு தனியார் வர்த்தக நிலையங்களில் அரிசி விற்பனையின் போது அரசாங்கத்தினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றமை தொடர்பாக பொது மக்கள் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ள இரகசிய முறைப்பாட்டையடுத்து, நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் பேரில் இவ்வாறான காலாவதியான ஒரு தொகை அரிசி மூட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேலும் காலாவதியான பாவனைக்குதவாத அரிசியை நுகர்வோர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்துள்ளமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் மேற்படி வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் இருவருக்கெதிராகவும் வழக்கு தொடர கண்டி நுகர்வோர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

# தோட்டக்காணி ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பொகவந்தலாவையில் போராட்டம்

(ஹட்டன் க.கிஷாந்தன்)



பொகவந்தலாவை பிளான்டேசனுக்கு சொந்தமான 467 ஹெக்டேயர் காணியில் 4 ஏக்கர் காணியினை தனியார் ஒருவர் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பொகவந்தலாவை பகுதியில் தோட்ட தொழிலாளர்கள் நேற்று பொகவந்தலாவை கொட்டியாகலை தொழிற்சாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்டியிலுள்ள நபரொருவர் மாடு வளர்ப்புக்காக வளர்க்கப்படும் புற்றரையினை தனக்கு சொந்தமென ஆவணங்களை காட்டி அதில் சுயதொழில் ஆரம்பிக்க போவதாகவும் கடந்த சில தினங்களுக்கு முன் காணியினை துப்புரவு செய்ய முற்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து தோட்ட நிர்வாகம் பொகவந்தலாவை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளது. அதனைத்தொடர்ந்தே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சுமார் 200 பேர் வரை இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதுடன் ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக நடைபெற்றது.

# நவமணி வாசகர் வட்டம்; அக்கரைப்பற்றில் அங்குரார்ப்பணம்

(அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் கலை கலாசார மற்றும் சமூகத்தின் உரிமைக் குரலை பக்கசார்பின்றி சுமந்து வெளிவரும் நவமணி பத்திரிகையின் வாசகர் வட்டமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு இன்று 28ஆம் திகதி அகில இலங்கை முஸ்லிம் லிக் வாலிப முன்னணிகளின் முன்னாள் தேசியத் தலைவர் எம்.உதுமாலெவ்வை தலைமையில் அக்கரைப்பற்றில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர் எச்.எம். நிஹால் அஹமட் தெரிவித்தார்.

இன்றைய தினம் நடைபெறவுள்ள நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள்,உலமாக்கள், அதிபர்கள் ,ஆசிரியர்கள், பாடசாலை மற்றும் அரபுக் கல்லூரி மாணவர்கள் ஒய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



அநுராதபுரம் நீதிமன்ற வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்டோர் அடிக்கல் நடுவதையும் பெயர் பலகையினை திரை நீக்கம் செய்வதையும் படங்களில் காணலாம்.

(படம்: அநுராதபுரம் விசேட நிருபர்)

# பொத்துவில் பள்ளிவாசலுக்கு சுகாதார அமைச்சர் நிதியுதவி



(றியாஸ் இஸ்மாயில்)

பொத்துவில், உல்லே பிரதேசத்தின் பசிச்சேனை ஜும்ஆ பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட நிர்மாணப் பணிகளை பார்வையிடுவதற்காக பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எம்.முபாறக்கின் அழைப்பின் பெயரில் குறித்த பள்ளிவாசலுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

பல தனவந்தர்களின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் குறித்த பள்ளிவாசலின் கட்டட நிர்மாணத்திற்காக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் 3 இலட்சம் நிதியை பள்ளிவாசல் நிர்வாகத்தினரிடம் கையளித்து, இன்னும் நிதி உதவிகளையும் மேற்கொள்வதாகவும் மாகாண அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், பொத்துவில் பிரதேச ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்அமைப்பாளருமான எம்.எஸ். எம்.வாசீத், குறித்த பள்ளிவாசலின் தலைவர், பள்ளிவாசலின் நிர்வாக உறுப்பினர்கள், அமைச்சரின் இணைப்பாளர் ஏ.எல்.நபீல், அமைச்சரின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி எம்.ஐ.எம்.நயீம் என பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டு.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுடன் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினர் சந்திப்பு



கடந்த ஐந்து நாட்களாக போராட்டம் நடாத்தி வரும் மட்டக்களப்பு மாவட்ட வேலையில்லா பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளை நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான் கடந்த சனிக்கிழமை சந்தித்தார். இச்சந்திப்பில் முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிர்தௌஸ் நழீமி மற்றும் ஏறாவூர் பிரதேச செயற்குழு உறுப்பினர் எம்.எல். எம்.சுஹைல் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தினர் மட்டக்களப்பு நகரில் தொடர்ச்சியான சத்தியாக்கிரக கவனயீர்ப்பு போராட்டத்தினை நடாத்தி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து கொள்ளுமுகமாகவும், அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்குமுகமாகவும் முன்னணியின் தலைமைத்துவ சபை உறுப்பினர்கள் இந்த சந்திப்பை மேற்கொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின்போது பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் தமது பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியிடம் எடுத்துரைத்தனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் பல்வேறு துறைகளிலும் பட்டப்படிப்புக்களைப் பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 4500 பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்காக காத்துக் கொண்டிருப்பதாகவும், கடந்த காலங்களில் பல்வேறு வகையிலான வாக்குறுதிகள் மாகாண மற்றும் மத்திய அரசாங்க பிரதிநிதிகளால் வழங்கப்பட்ட போதிலும் அவையெதுவும் இது வரை நிறைவேற்றப்பட வில்லை யெனவும் தெரிவித்தனர். அத்தோடு தமது கோரிக்கையடங்கிய மனு ஒன்றினையும் பொறியியலாளர் அப்துர் ரஹ்மானிடம் கையளித்ததோடு தமக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகளை வழங்குமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பொறியியலாளர் அப்துர் ரஹ்மான்,

இது தொடர்பிலான நடவடிக்கையின் முதற்படியாக உங்களது போராட்டத்தினையும், உங்களது கோரிக்கைகளையும் பிரதமர், ஜனாதிபதி, ஆளுநர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்கிறோம்.

அதனைத் தொடர்ந்து உங்களின் கோரிக்கைகளை நியாயப்படுத்தி சாத்தியப்படுத்தக்கூடிய சில புள்ளி விபரங்களை அவசரமாகத் திரட்ட வேண்டும். அதனை நீங்களும் நாங்களுமாகச் சேர்ந்து திரட்டி இந்தப் பட்டதாரிகளை எவ்வாறான ஒரு பொறிமுறையின் ஊடாக நியமனங்களுக்குள் உள்வாங்க முடியும் என்கின்ற ஒரு முன்மொழிவினை நாம் தயாரித்து சமர்ப்பிப்போம். எனத் தெரிவித்தார்.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் காதிபுல் ஹக் நாகூர் கனி

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இன்று (28) செவ்வாய்க்கிழமை முதல் ஒரு புதிய நிகழ்ச்சி ஆரம்பமாகிறது.

இரவு 8.15 மணிக்கு ஒலிபரப்பாகவுள்ள பாரம்பரியம் என்ற நேர்காணல் நிகழ்ச்சியில் மூத்த எழுத்தாளர் காதிபுல் ஹக் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனியின் நேர்காணல் இடம்பெறும். மூத்த எழுத்தாளரும் வானொலிக் கவிஞருமான எம்.எஸ்.எம். ஜின்னா இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குகிறார். பாரம்பரியம் தொடர் வானொலி நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திடீர் சோதனையில் 19 பேர் கைது

(வெலிகம நிருபர்)

வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் 19 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தினால் பிடியாணைப் பிறப்பிக்கப்பட்டுத் தலைமறைவாகியிருந்த (13) பேரும், ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்தாகக் கூறப்படும் இருவரும், வாளால் தாக்கிக் காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்ற இருவரும் சந்தேகத்துக்கிடமாக வீதியில் நடமாடிய இருவருமாக 19 பேர் வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.




எந்தரமுல்ல றோஸ்விலா கார்டன் அஹதிய்யதுல் பிர்தௌசியா பாடசாலையின் 2017ஆம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் (26) வத்தளை சாந்தி வரவேற்பு மண்டபத்தில் அஹதிய்யா அதிபர் ரி. அபிகான் அப்துலின் வழிநடத்தலில் அஹதிய்யாவின் தலைவர் சாமசிறி தேசகீர்த்தி எம்.ஏ.சி.கமால்டீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சட்டத்தரணி அஷ்ரப் ரூமியும், கௌரவ அதிதியாக புரவலர் ஹாசிம் உமரும், விஷேட பேச்சாளர்களாக கல்வி மேம்பாட்டு மற்றும் தரத்தன்மை நிறுவனத்தின் விரிவுரையாளர் நமீஸ் செய்யத் இப்ராஹிம், மௌலவி முனைஷ் (இஹ்ஸானி) உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது இஸ்லாமியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு அதிதிகளால் சான்றிதழ்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் 2017ஆம் ஆண்டிற்கான மாணவத் தலைவர்களுக்கு சின்னங்களும் அணிவிக்கப்பட்டன.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)



# நாம் திருந்துவதற்கான வாயில்கள் மூடப்பட்டுவிட்டதா ?

## டெங்கு அந்நியர் சதி

எம்.எஸ். முஹம்மத் இக்ரிமா

**இக் கட்டுரையை எமது நாடு முழுவதிலும் டெங்குவால் அவதியுறும் மக்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.**

**டெங்கு நோயாளிகளை பாதுகாக்க தியாகத்தோடு இரவு பகலாகப் போராடும் வைத்தியர்கள், சுகாதார அதிகாரிகள் அனைவரையும் நன்றி மேலீட்டோடு நினைவுகூர்கிறேன்.**

**பாதிக்கப்பட்டவர்களுக்காக இறைவனிடம் இரு கரமேந்தி இறைஞ்சுவோம்.**

**படிப்பினைகளை எடுத்து சுத்தமாக சூழலைப் பேணுவோம்.**

அண்மைக்காலமாக இலங்கையின் பல பாகங்களிலும் டெங்கு என்பது பாரிய அச்சுறுத்தலாக மாறியிருப்பதனை நாம் அறிவோம். அதிலும் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் மிக தீவிரமாக பரவி வருவதனை அவதானிக்க முடிகிறது. இதனை அவதானித்த சிலர் மிகைக் கற்பனையான, அரசியல்தனமான பதிவுகளை பல்வேறு ஊடகங்களூடாக பரப்பி வருவதைக் கண்டு நான் மிகவும் கவலையடைந்தேன். அதன் விளைவுதான் இக்கட்டுரை.

டெங்கு ஏன் முஸ்லிம் பிரதேசங்களை மட்டும் தாக்குகிறது ? அங்கு மட்டும் ஏன் குறிவைத்துப் பரவுகிறது ? இது இயற்கையான ஒன்றல்ல. இது திட்டமிட்டு ''அந்நிய சக்திகளால்'' பரப்பப்படுகிறது எனும் கருத்து எம்மத்தியில் பரப்பப்பட்டு வருகிறது. குறிப்பாக கிண்ணியா போன்ற பகுதிகளில் அண்மையில் யப்பானிய நிறுவனமொன்றினால் முன்னெடுக்கப்பட்ட யானைக்கால் நோய் பற்றிய ஆய்வு நடவடிக்கையையும் இதனோடு தொடர்புபடுத்துகிறார்கள். அவர்களால்தான் டெங்கு குடம்பிகள் கிண்ணியா முழுவதும் பரப்பப்பட்டுவருகின்றன. எனவே இதுபற்றிய தெளிவை மக்களுக்கு வழங்குவது என்மீதுள்ள சமூகக் கடமையென கருதுகிறேன். எதற்கெடுத்தாலும் எம்மில் நாம் குறைகாண மறுத்து, எமது தவறுகளை திருத்தும் சிந்தனையில்லாது எமது ஒட்டுமொத்த ஊத்தைகளையும் அந்நிய சமூகத்தின் தலையில் கட்டிவிட்டு நிம்மதிப்பெருமூச்சுவிடும் நிலை உலகம் முழுவதிலும் முஸ்லிம்களைப் பிடித்துள்ள அசிங்கமான சிந்தனை ! மட்டுமல்ல இது மிக ஆபத்தானதும் கூட !

தமிழ் சினிமா, கொமடி, மனைவிக்கு பிள்ளைப் பிறந்தாலும் எதிர்க்கட்சியின் சதி; என்பது இங்கு பொருத்தமாக அமைகிறது. சினிமாவில் கொமடியாக சொன்னது எமது சமூகத்தில் நிஜவாழ்வில் சொல்லப்படுகிறது.

டெங்கு ஏன் முஸ்லிம் பிரதேசங்களில் குறிப்பாகப் பரவுகிறது என்ற கேள்வி கேட்கப்படவேண்டிய ஒன்றுதான். ஆனால் அதற்காக எம்மவர்கள் கண்டுபிடித்த விடைதான் ஆபத்தானது. டெங்கு பரவுவதற்கான அந்தனை வாய்ப்புகளையும் எம் பிரதேசங்களில் வைத்துக்கொண்டு அந்நியர் சதி என்று கூறுவது எனக்கு ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது. முஸ்லிம் பிரதேசங்களை எடுத்துப்பாருங்கள். அங்குதான் மிகக்கூடியளவில்

1. **சட்டவிரோத காணி நிரப்பல்**
2. **இயற்கை பொது வடிகால்கள் மூடப்பட்டு கட்டிடம் கட்டல்**
3. **திட்டமிடப்படாத கான் கட்டுமானம்**
4. **சுற்றுச் சூழல் பற்றிய எந்தவித அக்கறையுமின்மை**
5. **குப்பை, நீர்தேங்கும் பொருட்கள் எந்தப் பொருட்டுமின்றி தூக்கி வீசப்படல்**
6. **தானும் தனதும் என்ற சுயநலப்போக்கு**

இவ்வாறான குணாம்சங்கள் தாராளமாக நீர் தேங்கி நிற்பதற்கும் நுளம்புகள் பெருகுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

வாறு அனைத்துவிதமான வாய்ப்புகளையும் வைத்துக்கொண்டு நுளம்பு குடம்பிகளை அந்நியர்கள் வந்து தூவிச்சென்றார்கள் என்று கூறுவது எவ்வாறு அறிவுடைமையாகும் ? இது பற்றிய மேலதிகத்தெளிவைப் பெறும் நோக்கோடு நான் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம். முஹம்மத் அஜித் அவர்களை தொடர்புகொண்டு கேட்டபோது சிரித்தேவிட்டார். அவர் இவ் 'அந்நியர் சதி' மந்திரத்தை தர்க்கரீதியாக மறுத்துரைத்தார். அவர் குறிப்பிட்டதாவது. கிண்ணியாவில் ஆரம்பத்தில் டெங்கு பதிவான இடங்களில் உடனடியாக சுத்தமாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர் டெங்கு தாக்கம் உடனடியாக கணிசமானளவு குறைந்ததாக குறிப்பிட்டார். கிண்ணியாவின் பைசல் நகர், அடப்பனார் வயல் போன்ற இடங்களை இதற்கு உதாரணமாகக் காட்டினார்.

மேலும் காத்தான்குடி ஒரு முஸ்லிம் பிரதேசம் அங்கு ஏன் டெங்கு தாக்கம் குறைந்தது ? அங்கு சம்மேளனம் எனும் அமைப்புகளின் ஒன்றியம் இந்த வருடம் டெங்கைத் தடுக்க சென்ற வருடமே இரு முழுநாள் சுத்தப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதனால் முழு ஊரும் சுத்தமாகியுள்ளது. அவ்வாறாயின் அங்கு மட்டும் அந்நியர் சதி இடம்பெறவில்லையா ? என்று கேள்வியெழுப்பினார். எனவே எங்கெல்லாம் எப்போதெல்லாம் சுத்தம் உறுதிப்படுத்தப்பட்டதோ அங்கெல்லாம் அப்போதெல்லாம் டெங்கு தவிர்க்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டினார்.

மேலும் யப்பான் நிறுவனம் ஒன்று இலங்கை பல்கலைக்கழக மாணவர்களோடு இணைந்து யானைக்கால் நோய் (Filariasis) பற்றிய ஆய்வொன்றை திருகோணமலையின் பல பாகங்களில் முன்னெடுத்தது. கிண்ணியாவில் எழுமாறாக பரிசோதித்ததில் எனது குடும்பமும் அடங்குவர். இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு உடனடியாக முடிவுகளும் தெரிவிக்கப்பட்டன. அதாவது யானைக்கால் நோய் அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை என முடிவு கூறப்பட்டது.

மேலும் அவர்கள் எமது சிறுநீர், மல மாதிரிகளையும் மேலதிக பரிசோதனைக்கு கொண்டு சென்றார்கள். இவ்வாறு பல வீடுகள் எழுமாறாக ஆய்விற்குட்படுத்தப்பட்டன. ஆய்வுக்குழுவில் இரண்டு முஸ்லிம் மாணவர்களும் அடங்கியிருந்தனர். அவர்கள் நுளம்புகளின் மாதிரிகளை சிறைப்பிடிக்கும் உபகரணம் ஒன்றையும் எனது வீட்டு வாசலில் வைத்து மறுநாள் காலையில் வந்து எமது சுற்றயல் நுளம்பு மாதிரிகளை சேகரித்தனர். எனவே இதற்கும் டெங்கு பரவலுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. இதை டெங்கு பரவலுடனும் ''அந்நியர் சதி'' யுடனும் முடிச்சுப்போடுவது அபத்தமானது. மடமைத்தனமானது.

எம்மில் அனைத்துவிதமான தவறுகளையும், ஓட்டைகளையும் வைத்துக்கொண்டு மற்றவர்களது தலையில் பழியைப் போட்டு இன்புறும் எமது மனோ நிலை, நாம் திருந்துவதற்கான வாயிலையே மூடச்செய்துவிடும். இதனால் நாம் திருந்துவதும் சமூக மாற்றமும் தூரமாகிக்கொண்டே போகிறது. இதனைத்தவிர இவ்வாறான மலட்டு குற்றச்சாட்டுகள் எந்த பலனையும் பிரசவிக்காது.

உலகில் முஸ்லிம்கள் தமக்குள் அடித்துக்கொள்கிறார்கள். கொலை செய்பவனும் முஸ்லிம், கொலை செய்யப்படுபவனும் முஸ்லிம்தான். ஆனால் இதற்கும் அந்நியர் சூழ்ச்சி என்று மட்டும் கூறி தப்பிவிடுகிறோம்.

ஆனால் இது அனைத்தும் நாமே எமது இஸ்லாத்தை தவறாகப் புரிந்தமையின் விளைவுகள் என்பதை நாம் ஒத்துக்கொள்வதில்லை. அதேபோன்றுதான் இந்த டெங்கு பற்றிய 'அந்நிய சதி' கதையளப்பின் நிலையும் ! டெங்கிற்கான சகல வாயில்களையும் நாம் திறந்துவைத்துக்கொண்டு அதற்கும் அந்நியர் சதியென்றால் இதனை கேள்வியுறும் அந்நிய சமூகம் எம்மைப்பற்றி என்ன புரிதலைப் பெறுவார்கள் ?

டெங்கு .... டெங்கு என்று அத்தனை பேரைக் கொண்டு பொது வைத்தியசாலைகளில் அடுக்குகிறோம். அங்கு எமக்கு இரவு பகலாக, எமது வைத்தியர்களிடம் காண முடியாத தியாகத்துடன் சிகிச்சையளிப்பவர்கள் யார் ? அந்நிய சமூக வைத்தியர்கள்!. எனவே இவ்வாறான 'அந்நிய சதி' கற்பனைகளைப் புனைந்து விடுவதில் பாரிய ஆபத்துகள் மறைந்துள்ளன. இந்த புனை கதைகள் தியாகத்துடன் பணிபுரியும் அந்நிய சமூக வைத்தியர்களின் காதுகளை எட்டுமாகவிருந்தால் , அல்லது இந்த குற்றச் சாட்டுகளை நாம் மறுலிக்காவிட்டால் எமது டெங்கு குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்க வைத்தியர்கள்கூட இல்லாமல் போய்விடும். எனவே இவ்வாறான அரசியல்தனமான , தான்தோன்றித்தனமான 'அந்நியர் சதி' குற்றச் சாட்டுகளை முன்வைப்பது எம்மை நாமே அழித்துக்கொள்ளும் ஒரு முயற்சியே தவிர வேறொன்றுமல்ல.

---

# உப்புச் சப்பில்லாத கஞ்சிப் பானையா? இந்த அரசாங்கம்

## ஒரு விமர்சனப் பார்வை





கஹட்டோவிட்ட முஹிடீன் (இஸ்லாஹி)

நாட்டில் தற்போதைய அரசாங்கம் பல்வேறு தரப்பினராலும் விமர்சனத்துடன், விசனம் கொண்டும் பார்க்கப்படும் ஒரு நிலைமை உருவாகியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலத்தில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நல்லாட்சி அரசாங்கம் பற்றிய ஒரு ஹேஷ்யம் கூறும் விளம்பரத்தை ஊடகங்களில் வெளியிட்டுள்ளது. இது குறித்து எதிர்த் தரப்பில் மட்டுமல்லாமல் ஆளும் தரப்பிலும் மனிதாபிமான உள்ளம் கொண்டவர்களினால் விமர்சங்கள் முன்வைக்கப்பட்டன.

கஞ்சியை எப்படி உணவுக்காக பரிமாற முடியாதோ, அதேபோன்று ஒரு உடன்பாடில்லாத அமைச்சர்களைக் கொண்ட ஓர் அரசாங்கமாக இது மாறியுள்ளது என பலரும் விசனப்பட்டுக் கொள்கின்றனர்.

இரு கட்சிகளிலுமுள்ள பிரதான தலைவர்கள் சந்தித்து ஒரு கருத்துக்கு வந்த போதிலும் கூட, தலைமைத்துவத்துக்கு புறம்பாக தமது சொந்த அபிப்பிராயங்களை பொதுமைப்படுத்தும் முக்கிய அமைச்சர்களின் நடவடிக்கைகள் மக்கள் நல்லாட்சி அரசாங்கத்தை தவறான நோக்கில் பார்க்க ஆரம்பித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் தேர்தலின் பின்னர் வந்து ஒட்டிக் கொண்டவர்கள் சிலர் ஜனாதிபதியின் கருத்துக்கு உடன்பாடில்லாது செயற்பட்டு வருகின்ற மைத்திரி தரப்பு அதிருப்தியாளர் குழுவொன்று இருக்கின்றது என்பதை சுசில் பிரேம்ஜயந்த் இன் கருத்துறுதியில் அரசியல் பின்புலம் உள்ள சகலரும் புரிந்துகொள்வார்கள்.

இதேவேளை, நல்லிணக்க செயலணியின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீ ல.சு.க.யின் போஷகருமான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நிலைப்பாடும் வெகுவாக இனவாதிகளினால் விமர்சிக்கப்படுகின்றது. இவர் தமிழ் மக்களுக்காக வெளியிட்டு வரும் தீர்வுத் திட்டம், இனவாத சிங்கள மக்களுக்கு மாத்திரமல்ல, மைத்திரி குழுவிலுள்ளவர்களுக்கும் சீரணிக்க முடியாதுள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் அனைத்துகள் அல்லர்.

அத்துடன் ஸ்ரீ ல.சு.க. யும் வரலாற்றுத் தவறுகளை செய்வதாகவே இந்த புதிய அரசியல் யாப்பைப் பார்க்கின்றனர். கூடிய சமஷ்டி அதிகாரம் கொண்ட ஒரு அரசியல் யாப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

நாட்டின் ஒற்றையாட்சி, இறையாண்மை, ஆள்புல ஒருமைப்பாடு என்பவற்றுக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் புதிய அரசியலமைப்போ அல்லது சீர்திருத்தங்களோ ஒருபோதும் முன்வைக்கப்பட மாட்டாது என சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் எஸ்.பீ. திஸாநாயக்க கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு

அன்று அந்த விளம்பரத்தில் கூறியதுதான் தற்போதைய அரசாங்கத்தின் நிலையா? என பலரும் யோசிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

ஒரு கஞ்சிப் பானையை பலரும் சேர்ந்து தத்தமது விருப்பத்துக்கு ஏற்ப சமைக்கும் காட்சியையே அந்த விளம்பரத்தில் ஒளிபரப்பப்பட்டது. அதன் கருத்து அவ்வாறு கஞ்சி காய்ச்சினால் கஞ்சி சமைக்கப்படும். ஆனால், அதனை யாரும் சாப்பிட முடியாமல் போகும் என்றே விளம்பரத்தை வெளியிட்டவர்கள் கூறவந்தனர்.

தற்பொழுதுள்ள கூட்டரசாங்கத்தையும், அதன் நடவடிக்கைகளையும் பார்க்கும் நல்லாட்சி அரசாங்கத்துக்கு வாக்களித்த ஒருவரும் கூடி, இந்த விளம்பரத்தின் பக்கம் தமது நினைவை மீட்டிப் பார்க்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலைமை உருவாகியுள்ளது என்பதை அரசாங்கத்தின் நிலைமைகளை அவதானிக்கும் ஒருவரினால் விளங்கிக்கொள்ள முடியுமாகவுள்ளது.

பலரும் பலரது விருப்பத்தின் படி பலசரக்குகளைப் போட்டு காய்ச்சியறனர். பிரதி அமைச்சர் டிலான் பெரேரா அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தின் செயற்பாடுகளையல்ல, கொள்கையையே விமர்சித்து வருகின்றார்.

அதேபோன்று ஸ்ரீ ல.சு.க.யின் முன்னாள் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட உறுப்பினருமான சுசில் பிரேம்ஜயந்த் உட்பட இன்னும் பலரும் இதேபோக்கையே கைக்கொண்டு வருகின்றனர். ஐ.தே.க. யின் பொருளாதார கொள்கை தொடர்பிலும், தற்பொழுது நாட்டில் எழுந்துள்ள முக்கிய சைட்டம் போன்ற முக்கிய பிரச்சினை தொடர்பிலும் பிரதான பங்காளியான ஐ.தே.க.யின் கருத்துக்கு எதிர்க் கருத்துக்களையே கூறிவருகின்றனர்.

ஐ.தே.க. யுடன் இணைந்திருந்தது போதும். நாம் இரண்டு வருடங்களே சேர்வதற்கு ஒப்பந்தம் செய்தோம். இனி மேலும், ஒட்டியிருக்க முடியாது என்று மக்கள் அரசாங்கத்தில் நம்பிக்கையிழக்கும் வார்த்தைகளையும் ஊடகங்களில் வெளியிட்டு வருகின்றார்.

இவரின் பின்னால், சுதந்திரக் கட்சியிசமூகத்தினருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கக்கூடிய நாடொன்றை கட்டியெழுப்புவதற்கு முக்கியத்துவம் அளிக்காமையே 30 வருட யுத்தத்துக்கு காரணம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக சிறுபான்மையினருக்கு விரிவான ஒரு உத்தரவாதம் தேவை. ஏற்கனவே அறிமுகம் செய்த 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் போதாது.

13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் போதுமானதாக இருந்தால் வடக்கு, கிழக்கில் போர் இடம்பெற்றிருக்காது எனவும் சந்திரிக்கா குமாரதுங்க கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற சேவை பாராட்டும் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

13 இற்கு அப்பால் செல்வதற்கு அரசாங்கத்தின் பங்காளியான ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. நாட்டிலுள்ள இனவாதிகளைத் திருப்திப் படுத்தாது போனால், அடுத்த தேர்தலில் இனவாத வாக்கு வங்கி திசை திரும்பி விடும் என்பதை இவர்கள் அறியாதவர்கடும்போக்கு சிந்தனை கொண்டவர்களை அமைதிப்படுத்தினார்.

புதிய அரசியலமைப்பொன்றை நாட்டுக்கு முன்வைக்காதிருக்க ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுதுள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை நீக்காதிருக்க ஸ்ரீ ல.சு.க. தீர்மானம் எடுத்துள்ளதாகவும் எஸ்.பீ. திஸாநாயக்க கூறியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கையில் உள்ள இரகசியங்களை விரைவில் வெளிப்படுத்தப்போவதாக ஹெல உறுமய கட்சியின் முக்கிய உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரர் அறிவிப்புச் செய்துள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் மக்கள் நம்பிக்கையிழந்து வருகின்றனர். அரசாங்கத்தின் பங்காளியாக இருந்து கொண்டு தொடர்ந்தும் அதனை அங்கிகரிக்க முடியாது எனவும், ஹெல உறுமய கட்சி தன்மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு விரைவில் பதிலளிக்கவுள்ளதாகவும் தேரர் கடந்த 26 ஆம் திகதி வெளியான சிங்கள வாரமஞ்சரியொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

பல்வகையான சிந்தனைப் போக்குகளையும் கொண்ட கட்சிகளை இந்த நல்லாட்சி அரசாங்கம் கொண்டிருப்பது சிறந்த அம்சம் என்பது பொதுவான ஒரு கருத்தாக காணப்பட்டது. இதனால், நாட்டின் தேசியப் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்துக் கொள்ள வாய்ப்பு உருவாகும் எனவும் புத்திஜீவிகள் பலரும் ஆரம்பத்தில் நல்லாட்சி அரசாங்கத்துக்கு பச்சைக் கொடி காட்டியிருந்தனர்.

ஆனால், நிலைமை தலைகீழாக மாறிச் செல்கின்றது என்பதையே நடைமுறை நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. இரு பெரும் கட்சிகள் இணைந்து தேசிய அரசாங்கத்தை உருவாக்கியது தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகும் என அன்று அரசியல்வாதிகள் நியாயங்களைக் கூறி மக்களின் எதிர்பார்ப்புக்களை வளர்த்தனர்.

இருப்பினும், அன்று தேர்தல் விஞ்ஞாபனமாக இரு கட்சிகளினாலும் முன்வைக்கப்பட்ட பிரதான தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வாக கூறப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தையே கடந்த மூன்று வருடகாலமாக முன்வைத்துக் கொள்ள முடியாத இழுபறி நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலங்கள் என்பவற்றுக்கான வாக்கெடுப்புக்கள் என்பவற்றில் அரசாங்கத்துக்கு தெளிவான பெரும்பான்மை ஆதரவு உள்ளது என்பதை வெளிப்படையாக அனைவரும் உணர்ந்துகொள்ள முடிந்தது. இதனை வைத்து அரசாங்கம் பலமாகவுள்ளது என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் கூறி வருகின்றனர். மஹிந்த சார்பு கூட்டு எதிர்க் கட்சி, மக்களின் இனவாத உணர்வுகள் காயாத வண்ணம் வைத்திருக்க, பல்வேறு விதமான நடவடிக்கைகளை ஒவ்வொன்றாக முன்னெடுத்து வருகின்றது. மக்களிடம் சூடேற்றப்பட்ட இனவாத உணர்வுகள் காயுமுன்னர் தேர்தலை நடத்துமாறு அக்கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றது. ஆனால், அரசாங்கமோ கூட்டு எதிர்க் கட்சியின் மோகப் பிடியிலிருந்து மக்கள் விடுதலையாகும் வரையில் தேர்தலை ஒத்திவைக்கும் உபாயங்களைத் தேடி கடைபிடித்தவண்ணம் நடைபோடுகின்றது. கழிந்துள்ள மூன்று வருடங்களில் நிறைவேற்றாத வாக்குறுதிகளை, எஞ்சியுள்ள காலங்களிலாவது நிறைவேற்றுமா ? என்ற எதிர்பார்ப்பிலும் மக்கள் நம்பிக்கையிழக்கும் வகையில்தான் கூட்டரசாங்கத்தில் எழுந்துள்ள சர்ச்சைகள் மாறியுள்ளன. எதிர்வரும் தேர்தலில் மக்கள் ஆதரவைத் தக்க வைத்துக்கொள்வதற்கு அரசியல் கட்சிகளின் செல்வாக்கு முக்கியம்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெர்மனில் அகதிகள் மீது தாக்கு: 3500 குற்றச்சாட்டுகள் பதிவு

ஜெர்மனில் தஞ்சம்புகுந்துள்ள அகதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சுமார் 3 ஆயிரத்து 500 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிரியா, ஈராக் உள்ளிட்ட நாடுகளில் உள்நாட்டு போர் காரணமாக நிலவி வரும் ஸ்திரமற்ற தன்மையால் அந்நாடுகளிலிருந்து மக்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கி அகதிகளாக படையெடுத்து வருகின்றனர்.

பிரான்ஸ் தீவிரவாத தாக்குதலுக்கு பின்னர் மேற்கு நாடுகளில் அகதிகளுக்கு அனுமதி அளிப்பதற்கு தயக்கம் ஏற்பட்டது. இருப்பினும் ஜெர்மன் உள்ளிட்ட நாடுகள் அகதிகளுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வந்தன.

இந்நிலையில், ஜெர்மனில் முகாம்களில் தங்கி இருக்கும் அகதிகள் மற்றும் தஞ்சமடைந்தோர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சுமார் 3 ஆயிரத்து 500 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2016ஆம் ஆண்டில் மட்டும் இந்த குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு ஆளானவர்களில் 43 பேர் சிறுவர்கள்.




2016ஆம் ஆண்டில் மட்டும் ஜெர்மன் 2,80,000 அகதிகளுக்கு தஞ்சம் அளித்துள்ளது. ஆனால், 2015இல் அனுமதி அளித்ததை விட இது 68 சதவீதம் குறைவு ஆகும். 2015இல் 8,90,000 அகதிகளுக்கு ஜெர்மன் அரசு தஞ்சமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பூமியை அழகாக்க மரங்களை நடுங்கள்

### தலிபான்களின் ஆச்சரிய அறிக்கை



ஆப்கானியர்கள் நிறைய மரங்களை நட வேண்டும் என்று அந்நாட்டின் தாலிபன் அமைப்பின் தலைவரான ஹிபத்துல்லா அகுந்த்ஸதா வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்கள் மற்றும் போராளிகள் ஒன்று அல்லது பல பழம் தரும் மரங்களை அல்லது பழம் தராத மரங்களை பூமியை அழகுபடுத்தும் நோக்கிலும், அல்லாவின் படைப்புகளின் நலனுக்காகவும் நிறைய நட வேண்டும் என்று அறிக்கையொன்றின் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

காடுகள் அழிப்பு பிரச்சினையால் ஆப்கானிஸ்தான் கடும் பிரச்சினையை எதிர்கொண்டு வருகிறது. எரிப்பதற்கும், சட்டவிரோத விற்பனைக்கும் மரங்கள் வெட்டி சாய்க்கப்படுகின்றன.

சுற்றுச்சூழல் குறித்து தாலிபன் அமைப்பிடமிருந்து அறிக்கைகள் வருவது மிகவும் அரிதான ஒன்று.

கடந்தாண்டு மே மாதம் தாலிபன் அமைப்பின் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்ட அகுந்தஸதா, இராணுவ தளபதி என்பதை காட்டிலும் மத தலைவராக மிகுந்த வலுவான நன்மதிப்பை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அலெப்போவை நெருங்கும் சிரிய இராணுவம்



சிரியாவின் அலெப்போ நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக ஜனாதிபதி அஸாத் ஆதரவு அரசு தரப்பு இராணுவம் முன்னேறி வருகிறது.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஸாத் ஆதரவு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே கடந்த 6 ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. மிதவாத கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்காவும், ஜனாதிபதி அஸாத்துக்கு ரஷ்யாவும் ஆதரவு அளித்து வந்தன.

சிரியாவின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் வசமுள்ள பல முக்கிய நகரங்களை அரசுப் படைகள் கைப்பற்றி விட்டன. சில இடங்களில் மட்டும் இழந்த இடத்தை மீட்கவும், இருக்கும் இடத்தை பறிகொடுக்காமல் இருக்கவும் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல் நடைபெற்று வருகிறது.

கிழக்கு அலெப்போ நகரை சிரிய அரசு ஆதரவு படைகள் மீட்டுள்ள நிலையில், அலெப்போ நகரின் இதர பகுதிகளை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிரியாவின் அலெப்போ நகரை நோக்கி ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அரசு ஆதரவு மற்றும் அதன் கூட்டுப்படை இராணுவம் முன்னேறி வருவதாக கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

சிரியாவின் வடமேற்கு பகுதியில் சுமார் 14 கிராமங்கள் கூடுதலாக அரசு தரப்பு படைகளின் வசம் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

89ஆவது ஒஸ்கார் விருது விழா:

## தவறாக அறிவிக்கப்பட்ட விருது: மீண்டும் திட்டமிட்ட சொதப்பலா?



ஒஸ்கார் விருது வழங்கும் விழாவில் சிறந்த திரைப்படத்திற்கான விருது லா லா லேண்டிற்கு தவறுதலாக அறிவிக்கப்பட்டது. இதனால் விழா அரங்கில் சற்று பரபரப்பு ஏற்பட்டது.

89ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நேற்று நடைபெற்றது. மொத்தம் 24 பிரிவுகளில் விருதுகள் அறிவிக்கப்பட்டன. இதில் சிறந்த துணை நடிகர், அனிமேஷன் படம், இசைத் தொகுப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கு முதலில் அறிவிக்கப்பட்டது. இறுதியாக சிறந்த திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருது அறிவிக்கப்பட்டது.

அப்போது, சிறந்த திரைப்படத்துக்கான விருதை அறிவித்தவர் 'லா லா லேண்ட்' படம் சிறந்த படத்திற்கான ஒஸ்கார் விருதுக்கு தேர்வானதாக மேடையில் அறிவித்தார். இதையடுத்து, 'லா லா லேண்ட்' படக்குழுவினர் மேடைக்கு வந்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். அப்போது, நடுவர் குழுவை சேர்ந்த ஒருவர் திடீரென குறுக்கிட்டு, மைக்கில் பேசிக் கொண்டிருந்தவரை தடுத்து நிறுத்தி சிறந்த படத்திற்கான விருது தவறுதலாக அறிவிக்கப்பட்டு விட்டதாக கூறினார்.

சிறந்த திரைப்படத்திற்கான ஒஸ்கார் விருதை 'மூன் லைட்' படம்தான் வென்றுள்ளது என்றும் தெரிவித்தார். இதனால் 'லா லா லேண்ட்' படக்குழுவினர் அதிர்ச்சியடைந்தனர். ஆனால், இந்த அறிவிப்பை 'மூன் லைட்' குழுவினர் நம்பவில்லை. ஆனால், நடுவர் குழுவை சேர்ந்தவர், திரும்பவும் இது ஜோக் அல்ல நிஜம் தான் என்று தெரிவித்து, அறிவிப்பு தாளினை பிரித்தும் காட்டினர். பின்னர், 'மூன் லைட்' படக்குழுவினர் மேடையில் வந்து தங்களுக்கான விருதை பெற்றுக்கொண்டனர். இதனால் சற்று நேரம் விழா அரங்கில் பரபரப்பு ஏற்பட்டது.

இதேபோல், 2015ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகி பட்டம் வழங்கும் விழாவில் நிகழ்ச்சி தொகுப்பாளர் ஸ்டீவ் ஹார்வி, பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பியா அலோன்ஜோ உர்ட்ஸ்பட்ச்க்கு பதிலாக கொலம்பியாவை சேர்ந்த அரியட்னா குடியர்ரெஸை தவறுதலாக அறிவித்திருந்தார். அரியட்னா குடியர்ரெஸுக்கு கிரீடம் எல்லாம் அணிவித்த பிறகே, இந்த தவறை விழாக்குழுவினர் அறிந்தனர். இதனால், வெறும் இரண்டு நிமிடம் மட்டுமே பிரபஞ்ச அழகியாக அரியட்னா இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற முக்கிய நிகழ்வுகளில் நடுவர்கள் எவ்வாறு அறிவிப்புகளை தவறுதலாக தெரிவிக்க முடியும் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. ஒரு பரபரப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு திட்டமிட்டே நிகழ்த்தப்படுகிறதா? என்ற ஐயமும் எழுகிறது. இந்த 89ஆவது ஒஸ்கார் விருது விழாவில் கௌரவ ஒஸ்கார் விருதினை நடிகர் ஜாக்கிஜான் பெற்றுகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உலகச் செய்திகள்

## ஈராக் குண்டுவெடிப்பில் பெண் நிருபர் உயிரிழப்பு



ஈராக் குண்டுவெடிப்பில் செய்திகளை சேகரிப்பதற்காக சென்ற குர்திஷ்தான் தன்னாட்சிப்பகுதியை சேர்ந்த தனியார் தொலைக்காட்சி நிறுவன பெண் நிருபரொருவர் உயிரிழந்துள்ளார்.

ஈராக்கின் முக்கிய நகரங்களில் ஒன்றான மொசூலின் கிழக்குப் பகுதியை ஐ.எஸ். இயக்கத்தினரிடமிருந்து இராணுவம் மீட்டுவிட்டது. தற்போது அந்த நகரின் மேற்குப் பகுதியையும் மீட்பதற்காக இராணுவம் கடுமையாக போரிட்டு வருகிறது.

இது தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்காக குர்திஷ்தான் தன்னாட்சிப் பகுதியை சேர்ந்த தனியார் தொலைக்காட்சி சேவை பெண் நிருபர் ஷிபா கார்டி சென்றிருந்தார். அவருடன் புகைப்பட பிடிப்பாளர் யூனிஸ் முஸ்தபாவும் சென்றிருந்தார்.

இந்நிலையில் சனியன்று அங்கு அவர்கள் வீதியோரம் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ஒன்று வெடித்தபோது அதில் சிக்கிக்கொண்டனர். இதில் பெண் நிருபர் ஷிபா சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்ததுடன் கெமராமேன் யூனிஸ் முஸ்தபா படுகாயமடைந்தார். அவர் உடனடியாக மீட்கப்பட்டு எர்பில் நகரிலுள்ள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இது குறித்து ஷிபா கார்டி பணியாற்றி வந்த தொலைகாட்சி நிறுவனமான ரூடா, சமூக வலைத்தளமொன்றில் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளது. அதில், எங்கள் தொலைகாட்சி சேவையின் முன்னணி போர் செய்தியாளர் ஷிபா கார்டி, போர்ச் செய்தியை சேகரிக்க சென்றிருந்தபோது மொசூல் குண்டுவெடிப்பில் சிக்கி உயிரிழந்தார். எங்களின் துணிச்சல் நிறைந்த செய்தியாளர்களில் அவரும் ஒருவர். அவரை இழந்து தவிக்கிறோம்.

- இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குட்டித் தூக்கம்; தியானம்; டி.வி பார்த்தல் சிறையில் பொழுதுபோக்கும் சசிகலா!



பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா சிறையில் தனது பொழுதை எப்படி கழிக்கிறார் என்பது குறித்த சுவாரசிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா தினமும் காலையில் தியானம் செய்வது, ஜெயலலிதா வைத்த துளசி மாடத்தை வழிபடுதல், அவ்வப்போது குட்டித் தூக்கம் போடுதல், டிவி பார்த்தல் என பொழுதை கழித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சொத்துக்குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுள்ள சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூன்று பேரும் பெங்களூர் பரபரப்பன அக்ரஹார சிறையில் கடந்த 16 ஆம் திகதி அடைக்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட முதல் நாளில் சலுகைகளை வழங்க மறுத்து கடுமையாக காட்டிக் கொண்ட சிறை நிர்வாகம் பின்னர் ஒவ்வொரு சலுகையாக அளித்து வருகிறது. இதனிடையே சசிகலாவை தமிழக சிறைக்கு மாற்றுவது குறித்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா ஒவ்வொரு நாளையும் எப்படி கழிக்கிறார் என்பது குறித்த சுவாரசிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு மணிநேரம் தியானம்

நாள்தோறும் காலை 5 மணிக்கு சிறையில் எழுந்துகொள்ளும் சசிகலா, ஒரு மணிநேரம் அறையிலேயே அமர்ந்து தியானம் செய்கிறார். பின்னர் 6.30 மணிக்கு வெந்நீரில் சசிகலா குளிப்பதாக கூறப்படுகிறது. ஜெ.வைத்த துளசி மாடத்தை சுற்றும் சசி இதைத்தொடர்ந்து சிறைக்குள் இருக்கும் அம்மன் கோயிலுக்கு இளவரசியோடு சென்று இறை தரிசனம், பின்னர் செய்தித்தாள்களை படிக்கும் சசிகலா காலை 8.30 மணிக்கு காலை உணவு இதைத்தொடர்ந்து இளவரசியும் சசியும் டி.வி பார்க்கின்றனர். 2 மணிக்கு மதிய உணவு உண்ணும் சசிகலாவும் இளவரசியும் பின்னர் ஒரு குட்டித் தூக்கம் போடுகின்றனராம். இதைத்தொடர்ந்து மீண்டும் டிவி பார்க்கும் இருவரும் 5 முதல் 6 மணி வரை தங்களின் உறவினர்களோடு பேசும் இவர்கள் இரவு 7.30 மணிக்கு இரவு சாப்பாட்டை முடித்து விட்டு 11 மணி வரை பேசிக்கொண்டு இருக்கின்றனராம். 11 மணிக்கு மேல் தான் இருவரும் தூங்கச் செல்கின்றனராம்.

## இந்தோனேசியாவில் அரசு அலுவலகங்கள், டி.வி. நிலையத்தை கைப்பற்றிய தீவிரவாதிகள்

இந்தோனேசியாவில் பொலிஸாருடன் ஏற்பட்ட கடும் துப்பாக்கிச் சமரையடுத்து அரசு அலுவலகங்கள் மற்றும் தொலைகாட்சி நிலையத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தோனேசியாவின் ஜாவா தீவிலுள்ள பாண்டங் நகரில் அரசு அலுவலகங்கள் உள்ளன. இங்குள்ள ஒரு பூங்காவில் நேற்று திடீரென குக்கர் குண்டு வெடித்தது. இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது.

இந்நிலையில் திடீரென மர்மநபர்கள் துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுகளுடன் அங்கிருந்த அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து அவற்றை கைப்பற்றினர். உள்ளே இருந்த அனைவரும் வெளியேற்றப்பட்டனர். தகவல் அறிந்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸால் மர்ம நபர்களை சுற்றி வளைத்தனர்.




இதன்போது மர்ம நபர்கள் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், வெடி குண்டுகளும் வீசப்பட்டன. பதிலுக்கு பொலிஸாரும் எதிர்த்தாக்குதல் நடத்தியதால் இருதரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கி மோதல் இடம்பெற்றது.

இதற்கிடையே அரசு அலுவலகங்களுக்கு தீ வைத்தனர். உள்ளே புகுந்த மர்மநபர்களுடன் பேச்சு நடத்த பொலிஸால் தீவிரமாக முயன்றனர். அதற்குள் டி.வி. நிலையத்தை மர்மநபர்கள் கைப்பற்றினர். இதற்கிடையே நடந்த துப்பாக்கி மோதலில் யாருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. இந்த தாக்குதலில் ஈடுபட்டது தீவிரவாத கும்பல் என தெரிய வந்துள்ளது.

ஆனால் இதற்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்புபேற்கவில்லை. ஆனால், அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகளின் முயற்சி தோல்வியடைந்து வருகின்றது. எனவே இத்தாக்குதலில் அவர்களே ஈடுபட்டிருக்க கூடும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ஈராக்கின் தேசிய பாதுகாப்புப் படையினர் ஐ.எஸ் தீவிரவாதிகள் மறைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் தெற்கு மொசூல் நகரின் சிவிலியன்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். தேசிய பாதுகாப்பு படையினர் சிவிலியன் ஒருவரை துப்பாக்கி முனையில் நிறுத்தியபோது, மனைவி குழந்தைகள் கவலையுடன் காட்சியளிப்பதையும், படைவீரனொருவன் வீடொன்றின் கதவை உடைத்துக்கொண்டு நுழைகின்றபோது பயத்துடன் காட்சியளிக்கும் பெண்ணொருவரையும், சோதனையில் ஈடுபட்டுள்ள படைவீரனொருவனை சிறுமியொருவர் பார்த்துக்கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

## சிறைச்சாலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குறித்த சந்தேகநபர்களை கடுவலை நீதிமன்றுக்கு நேற்றுகாலை 8 மணியளவில் கொண்டு செல்கையிலேயே வேன் மற்றும் கெப் ரக வாகனத்தில் வந்த சிலர் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். தாக்குதல் மேற்கொண்டோர் பொலிஸ் சீருடை போன்ற ஆடை அணிந்திருந்ததாகவும் இத்தாக்குதலில் படுகாயமடைந்த மூவர் தற்போது களுத்துறை, நாகொட வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸ் தரப்பிலிருந்து கூறப்படுகின்றது.

அதாவது, கடுவலை பிரதேசத்தைச் சேர்ந்த பாதாளக் குழுத் தலைவரான ரணாலே சமயங் என அழைக்கப்படும் அருண தமித் உதயங்க பதிரண எவத் சமயங் முக்கொலைகளுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளியாவார்.

இவரை இதற்கு முன்னர் கைது செய்து நீதிமன்றுக்கு அழைத்து வந்தபோதும் கடுவலை பிரதேசத்தில் வைத்து ஒருசிலரால் கொலைவெறித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், இரு பாதாளக் குழுக்களிடையே அண்மையில் இடம்பெற்ற மோதலின் விரோதத் தன்மையாலேயே தற்போது இவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் சம்பவத்தில் பலியானோரின் உடல்களை களுத்துறை நீதிவான் பாரதி விஜேரத்ன பார்வையிட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரை நீதிமன்றுக்கு அழைத்துவரும்போது, குறித்த பொலிஸ் பஸ்ஸுக்கு குறுக்கே வந்துநின்ற கெப் ரக வாகனத்தில் வந்தோரே பஸ்ஸில் அத்துமீறி ஏறி, இவரை சரமாரியாகச் சுட்டுள்ளனர். இதன்போது பஸ்ஸில் பயணித்த எஸ்.சன்னிகம் மற்றும் எஸ்.ஆர்.விஜேரத்ன என்ற இரு சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் திலக் மலிக்கே, பிரசன்ன சம்பத், கெலும் பிரியங்கர, பிரசன்ன குமார ஆகிய கைதிகளும் பலியாகினர்.

சம்பவத்தின்போது குற்றவாளிகள் வருகைதந்திருந்த வாகனங்களின் 12 முதல் 15 வரையானோர் பிரிந்துக் காணப்பட்டதாகவும் இந்தக் கொடூரத்தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள களுத்துறை பிரதிப்பொலிஸ் மா அதிபர் ஜி.கே. பெரேராவின் பணிப்பில் இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயணத்தில்....

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய நாடுகளின் இலங்கை சனத்தொகை நிதியம் மேற்கொண்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் இலங்கை சனத்தொகை நிதியம் 15-30 வயதுக்குட்பட்ட 25,00 பெண்கள் மற்றும் சிறுமிகளிடம் மேற்கொண்ட ஆய்வு முடிவுகளிலே மேற்படி தகவல் வெளியாகியுள்ளது.

அவளின் பயணம் பாதுகாப்பானதா? என்ற தொனிப்பொருளில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை நிலையம் நேற்று ஏற்பாடு செய்திருந்த மக்களை அறிவூட்டும் நிகழ்வில் மேற்படி ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

தேசிய முக்கியத்துவமிக்க இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கு பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, பிரதமர் அலுவலகம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியன ஐக்கிய நாடுகளின் இலங்கை நிலையத்துடன் இணைந்து திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

பொதுப் போக்குவரத்து பஸ் வண்டிகள் மற்றும் புகையிரதங்களில் பயணிக்கும் பெண்களும் சிறுமிகளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படும் போது விடயத்தை எடுத்துக் கூறல், நடவடிக்கையெடுத்தல், பக்கத்தில் இருப்பவர் தட்டிக்கேட்டல், தலையிடுதல், உதவி வழங்குதல், தவறிலிருந்து தவிர்ந்துகொள்ளல் போன்ற சிபாரிசுகளும் முன்வைக்கப்பட்டன.

## நிலைமாற்று...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு, அரசாங்கம் அவர்களின் உரிமைகளை மீண்டும் வழங்கவேண்டும் என்றும் அது தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் மற்றும் ஆய்வுக்கான மத்திய நிலையம் இலங்கையில் நிலைமாறு நீதியின் நிலை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டார்கள் என்ற உண்மையை பல அரச சார்பற்ற நிறுவனங்கள் மறைக்க முற்படுவதாகவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலைமாறு நீதியின் நிலை குறித்து மனித உரிமைகள் மற்றும் ஆய்வுக்கான மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கமும் சில சிவில் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் குறித்து மாத்திரமே கவனம் செலுத்துகின்றனர். எனினும் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்களும் உள்ளனர். அவர்களின் மீள்குடியேற்றம் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டும். சிங்கள, முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் குறித்து ஆய்வுகளை மனித உரிமைகள் மற்றும் ஆய்வுக்கான மத்திய நிலையம் மேற்கொண்டுள்ளது. மீள்குடியேற்றம் குறித்த திட்டங்களும் உள்ளன. கடந்த காலங்களில் போதிய திட்டமிடலின்றி மீள்குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதே வில்பத்து போன்ற சர்ச்சைகள் ஏற்பட காரணமானது. காணாமல் போனோர் தொடர்பாக 65,000 மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

சர்வதேசத்தின் பங்குபற்றல் இலங்கையின் நிலைமாறு நீதிக்கான பொறிமுறைகளை இலகுவாக்கும் என்று மனித உரிமைகள் மற்றும் ஆய்வுக்கான மத்திய நிலையம் நம்புகின்றது.

## ஜிஹாத்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சித்தரிக்கும் முயற்சிகளை நாங்கள் பார்க்கிறோம். இதற்கு பதிலளிப்பதற்கு உலமாக்கள், ஆலிம்கள், புத்திஜீவிகள் காட்டும் தயக்கம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றஇ திஹாரி உம்முல் குரா தஜ்வீத் மத்ரஸாவின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது;

இந்த வருட இறுதியில் சர்வதேச அல்குர்ஆன் ஆராய்ச்சி மாநாட்டை நடாத்தவுள்ளோம். மாற்றுமதத்தவர்கள் தவறான அர்த்தங்களை கற்பிக்கின்ற அல்குர்ஆன் வசனங்களுக்கு இந்த மாநாட்டின்போது சரியான தெளிவுகளை வழங்கவுள்ளோம். இதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மார்க்க அறிஞர்களை அழைக்கவுள்ளோம்.

மார்க்க கல்வியில் முஸ்லிம்கள் காட்டும் ஆர்வம் குறித்து தவறான சிந்தனை கொண்டவர்கள், மத்ரஸாக்களை பயங்கரவாதத்தின் விளைநிலங்களாக சித்தரித்துக் காட்டுகின்றனர். இவ்வாறான சிந்தனை கொண்டவர்களின் விமர்சனங்களுக்கு பதிலளிப்பதன்மூலம் முஸ்லிம் சமூகம் குறித்த சரியான பார்வையை ஏற்படுத்த முடியும்.

இன்னுமொரு சாரார் கடைப்பிடிக்கும் அகீதா, பழக்கவழக்கங்களை பொறுமையில்லாமல் தங்களுக்குள்ளேயே தர்க்கம் செய்வதால், மாற்று மதத்தவர்கள் மத்தியில் முஸ்லிம்கள் குறித்து தவறான புரிதல்களை ஏற்படுத்தப்படுகின்றன. இதை லாவகமாக பயன்படுத்த முனைகின்ற தீவிரவாதப் போக்குடைய சில அமைப்புகளுக்கு தீனிபோடுகின்ற ஒரு விடயமாக இது மாறிவருகிறது.

## உப்புச் சப்பில்லாத...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனால், அரசாங்கத்துடன் ஒட்டியுள்ள இரு பிரதான கட்சிகளும் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள முயற்சித்து வருகின்றன.

ஜனாதிபதி இந்த விடயத்தில்தான் பாக்கு வெட்டியில் அகப்பட்ட பாக்குபோன்று சிக்கித் தவிக்கவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெளிப்படுத்த வேண்டிய நன்றிக்கடன் ஒருபுறம், கட்சியின் தலைவராகவிருந்து கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டிய பணி மறுபுறம். ஜனாதிபதியின் சமாளிப்பு போக்கு கட்சியின் எதிர்காலத்துக்கு பாதிப்பானது என்று உணர்ந்ததனாலோ என்னவோ, கட்சியிலுள்ள சுசில் பிரேம்ஜயந்தாக்கள் போன்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு எதிர்த்திசையில் நடைபோட ஆரம்பித்துள்ளனர் என்ற சந்தேகம் சாதாரணமாக எல்லோரிடையேயும் எழுந்துள்ளது.

## ஹெம்மாதகமை இளைஞர் பருப்புக் களஞ்சிய விபத்தில் மரணம்

களனி, சப்புகஸ்கந்தையிலுள்ள பருப்பு களஞ்சியசாலையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்த முஹம்மத் மபாஸின் ஜனாஸா ஹெம்மாதகமை ஹிஜ்ராகமை பள்ளிவாசல் மையவாடியில் கடந்த சனியன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

பருப்பு சேகரித்து வைக்கப்பட்டிருந்த பெட்டகம் சரிந்து விழுந்ததிலே மேற்படி அனர்த்தம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த முஹம்மத் மபாஸ்(36) ஹெம்மாத்தகம, ஹிஜ்ராகமயை சேர்ந்த லொட்டஸ் ஜுனைட் என்பவரின் மகனாவார். விபத்தில் காயமடைந்த மேலும் நால்வர் கிரிபத்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கட்சியை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் பிரதிநிதிகளுக்கான புத்தெழுச்சி செயலமர்வு கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது;

நாட்டின் பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் முஸ்லிம் தேசியவாதம் வேரூன்றியிருக்கும் கிழக்கு மாகாணத்தில் கால்பதிப்பது மிகவும் சவாலான விடயமாகும். இந்தக் கட்சிகளில் தொங்கிக்கொண்டு செல்வதற்கு சிலர் முயற்சி செய்துகொண்டிருக்கின்றனர்.

இதில் பழைய பிரமுகர்களையும் உள்வாங்குவதற்கு முயற்சிக்கலாம்.

இப்படியான பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் தேசியப்பட்டியல் வழங்கப்படாமையாகும். கட்சியிடம் இருக்கின்ற இரண்டு தேசியப்பட்டியலை இருவருக்கும் கொடுத்துவிட்டால் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் பிரதிநிதிகளுக்கான புத்தெழுச்சி செயலமர்வு சனிக்கிழமை (25) கண்டி ஒக்ரே ஹோட்டலில் நடைபெற்றது. கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடளாவிய ரீதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் உயர்பீட உறுப்பினர்கள் என 160க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## வடக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிங்கள புத்தி ஜீவிகளினதும் மத குருமார்களினதும் பணி பாராட்டத்தக்கது என்று கைத தொழில் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மரங்களில் கருணை காட்டுவோம் எனும் தொனிப் பொருளில் நேற்று மறிச்சிக்கட்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பயன் தரும் மரங்கள் நடம் திட்டத்தின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் அமைச்சர் மேலும் கூறியதாவது:

மக்களுக்கு வருமானம் பெறும் வழிவகைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும், இயற்கை வளங்களை பாதுகாக்கும் எண்ணத்திலுமே பயன் பெறும் மரங்களை நடும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது முசலி பிரதேசத்தில் உள்ள பாலைக் குழி, மறிச்சிக்கட்டி, கரடிக் குழி போன்ற இடங்களிலும் மக்கள் விரட்டப் பட்டிருந்தனர்.

அவர்கள் யுத்த முடிவின் பின்னர் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிய போது அவர்கள் வாழ்ந்த இடங்கள் காடாக காட்சியளித்தன.

இவர்கள் அங்கு வாழ முடியாத நிலையில் பின்னர் 2012 ஆம் ஆண்டு தமது பிரதேசங்களை துப்புரவு செய்வதற்காக சென்றனர். இங்கு வாழலாம் என்ற நம்பிக்கையிலேயே வந்தனர்.

எனினும் தங்களது சொந்த நிலங்களை அவர்கள் துப்புரவாக்கிய போது அந்த காணிகள் வன பரிபாலன திணைக்களத்திற்கு சொந்தமாக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு கிடைத்தது.

மறிச்சிக்கட்டி, கரடிக் குழி என்ற பெயரிலும் , வேப்பன் வில, என்ற பெயரிலும் அவை வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தான் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனாதிபதியின் விசேட செயலணியின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டிருந்தது. ஜனாதிபதி தலைமையில் குழு வொன்றும் உருவாக்கப்பட்டு மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர், பிரதேச செயலாளர், அரச அதிபர், இராணுவ அதிகாரிகள், வன பரிபாலன திணைக்கள செயலாளர், வன ஜீவராசி திணைக்கள செயலாளர் உள்ளடக்கப் பட்டு சுமார் 20 இற்கும் அதிகமான கூட்டங்கள் கொழும்பில் நடாத்தப்பட்டன.

இந்த பிரதேசத்தில் இந்த அதிகாரிகள் பல முறை சென்று மக்களை நேரில் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்த பின்னர் இந்த மக்களை இப்பகுதியில் குடியேற்றுவதற்கு முடிவு செய்தனர்.

அவர்களின் யோசனைப் படி வன பரிபாலன திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து ஜீபிஎஸ் வழியாக சொந்தமாக்கப்பட்ட முஸ்லிம்களின் பூர்வீக காணிகளில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் அரை ஏக்கர் விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

காணிக் கச்சேரி வைக்கப்பட்டு, அதிகாரிகள் பிரசன்னமாகி, அவர்களுக்கு குடியிருப்பதற்கு அரை ஏக்கர் காணியும், தொழில் செய்வதற்கு ஒரு ஏக்கர் காணியும் வழங்குவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

மாவட்ட அபிவிருத்தி சபையில் தலைவர் என்ற வகையில் அத்தனை கூட்டங்களிலும் அத்தனை நடவடிக்கைகளிலும் பங்கு பற்றியிருக்கின்றேன்.

வன பரிபாலன திணைக்களத்திற்கு இம் மக்களின் காணிகள் சொந்தமாக்கப்பட்ட விடயம் அவர்களின் பிரதி நிதியான எனக்கோ, பிரதேச செயலாளருக்கோ, காணி சொந்தக் காரர்களுக்கோ, தெரியாதொன்றாகும்,

ஆறடி நீளத்திற்கு மேல் மரங்கள் வளர்ந்திருந்தால் 2007 ஆம் ஆண்டின் சுற்றறிக்கையின் படி வன பரிபாலன திணைக்களத்தின் அனுமதியின்றி காணிகளை வெட்ட முடியாது என்று அறிவுறுத்தல் இருக்கிறது.

இந்த நிலையில் அனுமதி பெற்று காடுகள் துப்பரவாக்கப்பட்டு இந்த மக்களுக்கு அரை ஏக்கர் காணி வழங்க முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே இம் மக்கள் வில்பத்து காடுகளை அழிகின்றனர் என்று அப்பட்டமான பொய்களை பரப்பும் படலம் ஆரம்பமாகியது.

## காலியில் கொடியேற்றம்

காலி கந்தேவத்த காதிர் ஜும் ஆ பள்ளிவாசலில் 114 வருடமாக நடைபெறும் பெரிய கந்தூரி மஜ்லிஸின் கொடியேற்ற நிகழ்வு இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வரை தினமும் மௌலூத் ஓதப்பட்டு தமாம் மஜ்லிஸ் நடைபெறும் என பள்ளிவாசல் முக்கியஸ்தரான அஸ்மி ஜெமீல் தெரிவித்தார்.

## இந்தோனேஷியா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்தோனிஷிய ஜனாதிபதி ஜொகோ விடோடா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விடுத்த உத்தியோகபூர்வ அழைப்பின் பிரகாரமே இவ்விஜயம் மேற்கொள்ளப்படுகிறது.

அந்நாட்டுக்குச் செல்லும் ஜனாதிபதி எதிர்வரும் மார்ச் மாதம் 6, 7 ஆம் திகதிகளில் இடம்பெறும் இந்து சமுத்திர வலய நட்புறவு அமைப்பின் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வக்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேரமில்லாததினால் வக்பு சபைக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்படுவது பற்றிக் கேட்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஏழுபேர் கொண்ட வக்பு சபையின் கூட்டங்களுக்கு அங்கத்தவர்கள் வராததினால் இம்மாதத்தில் கூட்டம் இரு முறை ஒத்திப் போடப்பட்டுள்ளது

இதனையடுத்தே வக்பு சபைக்கு புதியவர்களை உள்வாங்குவதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

## லெபனான்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைய லெபனானுக்காக இலங்கை தூதுவர் ஆர்.கே. விஜேரத்ன மென்டிஸ் லெபனானின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் குடிவரவு குடியல்கவு திணைக்களத்தின் பிரதானி ஜெனரால் ஈப்ரஹிம் அப்பாஸடன் மேற்கொண்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் பலனாகவே மேற்படி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

குறித்த பொது மன்னிப்பின் கீழ் சட்டவிரோதமான முறையில் லெபனான் நாட்டில் தங்கியிருக்கும் 400 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் இலங்கைக்கு செல்ல முடியும். இதனால் இலங்கை அரசு விசேட வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது. இந்த பொது மன்னிப்பு காலத்தில் இவர்கள் சிறை அடைக்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பு இவ்வாறான பொது மன்னிப்பு காலம் 2004 ஆம் ஆண்டே வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தமே இதற்கு காரணம்.

இதேவேளை, 2010ஆம் ஆண்டுகளிலும் இந்த பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய பிரதம...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க யார் அடுத்த நீதியரசர்? என்பதற்கான பதில் இன்னும் ஓரிரு நாட்களில் அரசினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இன்றைய தினம் தனது 64 ஆவது வயதில் ஓய்வுபெறவுள்ள கே. ஸ்ரீபவன் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பிரதம நீதியரசராக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கையின் 44 ஆவது பிரதம நீதியரசரான இவர், 1996 ஆம் ஆண்டில் சட்டமா அதிபராகவும் 2002 ஆம் ஆண்டில் மேன்முறையீட்டு நீதிபதியாகவும் 2008 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற

நீதிபதியாகவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர்களுக்கும் உதவுவது எனது பார்வையில் 'ஸதகதுல் ஜாரியா' எனும், நன்மை கிடைக்கும் ஒரு வணக்கமாகும் என கல்விக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷேக் எஸ்.எல்.நௌபர் (கபூரி) தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் என். எம். அமீன் தலைமையில் அரனாயக்க, ஹெம்மாதகம பிரதேச உயர் வகுப்பு மாணவர்களுக்காக வில்பொலை அஸ்ரப் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட '21ஆம் நூற்றாண்டில் ஊடகம்' என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் மீடியா போரத்தின் கேகாலை மாவட்ட இணைப்பாளர் ஆதில் அலி சப்ரி, அல்மனார் மஸ்ஜித் மற்றும் திப்பிட்டிய முஸ்லிம் மஸ்ஜித் மகாவித்தியாலயத்தோடு இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயம், கடபேரிய அல் ஜலால் மகா வித்தியாலயம், ஹெம்மாதகம அல் - அஸ்ஹர் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடர்ந்து பேசிய அஷ்ஷேக் நௌபர் கூறியதாவது,

நாங்கள் கண்ணியமிக்க எழுத்தாளர்களை தயார்படுத்தி வைத்திருக்கின்றோம். நீங்கள் செய்யும் அனைத்தையும் அவர்கள் அறிந்து ஒன்றையும் விடாமல் அவர்கள் பதிந்து கொண்டே இருக்கின்றார்கள். இரு மலக்குகள் ஒவ்வொரு நாளும் அவர்களுடைய ஊடகப் பணியை செய்து கொண்டே இருக்கின்றார்கள் என்பதாக அல்குர்ஆனிலே அல்லாஹ் கூறுகிறான்.

'நூன்' என்ற எழுத்தின் மீது சத்தியமாக, எழுதப்பட்டிருக்கும் ஏடுகளின் மீது சத்தியமாக! என்று அல்லாஹ் சத்தியம் செய்கிறான். ஒவ்வொரு மனிதனும் தனது தாயின் கருவறையிலே உருவாகி நான்கு மாதங்கள், 3ஆவது நாற்பது அதாவது 120 நாட்களைத் தாண்டியதும் அவர்களுக்காக அல்லாஹ் எல்லா ஏற்பாடுகளையும் செய்கிறான். அவர்களுடைய றிஸ்க், காலம், வாழ்நாள், அவர் நல்லவரா? கெட்டவரா? போன்ற எல்லா விடயங்களையும் அல்லாஹ்விடம் பதிவு செய்யப்படுகிறது. ஜிப்ரீல் (அலை) அவர்கள் செய்த வேலை சாதாரண வேலை அல்ல.

அல்லாஹ்விடம் இருந்து உலகத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நபிமார்களுக்கு தூதுச் செய்திகளைக் கொண்டு வந்த உன்னதமான ஊடக சமூகத்துக்கே தலைவராகப் பணியாற்றிய ஒரு மலக்குதான் ஜிப்ரீல் (அலை) என்பதை நாங்கள் மறந்து விடக் கூடாது.

நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் ஓர் ஊடக சந்திப்பைப் போன்று, ஊடக மாநாட்டைப் போன்று, பஜ்ருடைய நேரத்துக்குப் பிறகு உள்ள நேரத்தைப் பயன்படுத்தியதாக வரலாறுகளில் பார்க்கிறோம்.ஒவ்வொரு நாளும் இஸ்லாமிய நடைமுறை நம்பிக்கைக் கோட்பாட்டை ஊடகவியலாளர்கள் செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உலகம் தோன்றிய காலத்திலிருந்து அது நடந்து கொண்டுதான் இருக்கின்றது. இந்தப் பணி ஓர் அமானிதமாகும். இந்தப் பணியை செய்து கொண்டிருப்பவர்கள் மிகப் பெரிய தியாகப் பணியைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதேநேரத்தில் நீதிக்குப் புறம்பாக செயற்படக்கூடாது. யாரையும் தங்களுடைய பணியின் மூலம் சுய சிந்தனைக்காகப் பழிவாங்க முடியாது.

நாங்கள் எப்பொழுதும் சமூகம், நாடு, ஒன்றுமை, நேர்மை, சத்தியம் என்ற ரீதியில் அந்த ஊடகத் துறையைச் செய்யும் போது அவர்களுக்குரிய நன்மை நிச்சயம் இருக்கின்றது. அவர்கள் எழுதுகின்ற ஒவ்வொரு சொல்லும் பேச்சும் 'ஸதகதுல் ஜாரியா'வாக மாற வேண்டுமென்றால் இந்த ஊடகத் துறை புனிதமானது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

எனவே எங்களுடைய முஸ்லிம் ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பணக்காரர்கள் அல்ல, பெரும் தொழிலதிபர்கள் அல்ல, ஆனால் பலருடைய விமர்சனத்தையும் பெற்று இந்தப் பணியை இந்த நாட்டிலே செய்கிறார்கள் என்றால் அவர்கள் எமக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் அருள் என்று நினைக்கிறேன்.

அந்த அருளை நாங்கள் பாதுகாக்க வேண்டுமென்றால் எங்களுடைய அனைத்துத் துறையினரும் ஊடகத்துக்காக அர்ப்பணிப்புச் செய்தே ஆக வேண்டும். எனது பார்வையில் அவர்களுக்கு உதவி செய்வது 'ஸதகதுல் ஜாரியா' ஆகும். அவர்களை வளர்த்து விடுவது முஸ்லிம்களின் இருப்புக்கான அடையாளமாகும். இந்த நாட்டில் கட்சி வேறுபாடு, இயக்க, சமூக, மஸ்ஜிதுகளின் வேறுபாடுகள் இன்றி எல்லோரும் இதனை விளங்கி பணியாற்றத் தவறுவோம் என்றிருந்தால் நிச்சயமாக உங்களைப் பற்றி எழுதுவதற்கு கூட ஆள் இல்லாது போய்விடலாம். அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்.

எனவே இந்த ஊடக தர்மத்தைப் பாதுகாத்து ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதைப் போன்று ஊடகப் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து உலமாக்களும் முஸ்லிம்களாகிய நாங்களும் பணியாற்ற வேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வு நான்கு அமர்வுகளாக நடைபெற்றது. முதலாவது அமர்வு தினகரன் பத்திரிகையின் தமிழ்ப்பிரிவு ஆலோசகர் எம்.ஏ.எம். நிலாம் தலைமையிலும் இரண்டாவது அமர்வு சிரேஷ்ட ஊடகவியலாளர் ரஷீட் எம். ஹபீல் தலைமையிலும் மூன்றாவது அமர்வு முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அஹ்மத் முனவ்வர் தலைமையிலும் நடைபெற்றது.

விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம். பீ. எம். பைரூஸ், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு பொறுப்பதிகாரி எம்.எஸ்.எம். அமீர் ஹுசைன், நவமணி பத்திரிகையின் ஆசிரியர் பீட உறுப்பினர் கலைவாதி கலீல், ஆகியோர் கருத்தரங்கில் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

தகவல் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஹில்மி முஹம்மட், சுயாதீன ஊடக வலையமைப்பின் வசந்தம் தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் சித்தீக் ஹனிபா, தினகரன் ஆசிரியர் பீட உறுப்பினர் தௌபீக், நவமணி ஆசிரியர் பீட உறுப்பினரும் ஊடகவியலாளருமான எம். எஸ்.எம். ஸாகிர், மற்றும் அல்மனார் பரிபாலனசபைத் தலைவர் எம்.யூ.பர்ஹான் முஹம்மத், அதிபர் எம். ஐ. எம். எம். ஸாபிரீன், வில்பொலை ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் அஷ் - ஷெய்க் எம்.எம்.எம். அலி சப்ரி மற்றும் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கினை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பொதுச் செயலாளர் என்.ஏ.எம். சாதிக் ஷிஹான் நெறிப்படுத்தினார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## லசித் மாலிங்க மீண்டும் டெஸ்ட்டில் இணையவேண்டும் – கிரஹம் போர்ட்

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியில் லசித் மாலிங்க மீண்டும் இணைய வேண்டும் என்று அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையில் ஓய்விலிருந்த லசித் மாலிங்க அண்மையில், அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான ரி20 கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடி இருந்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட்,

'ரி20 கிரிக்கெட் போட்டிகளில் அவர் மீண்டும் இணைந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. அவரது வருகை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் இலங்கை அணியை பலப்படுத்தும்.

ஆனால், அவர் டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாக இருக்கின்றது ' என தெரிவித்துள்ளார்.



## டுபாய் டியூட்டி பிரீ மகளிர் டென்னிஸ்: உக்ரைன் வீராங்கனைக்கு சாம்பியன் பட்டம்

டுபாய் டியூட்டி பிரீ மகளிர் டென்னிஸ் (Dubai Duty Free Women's Tennis) தொடரின் ஒற்றையர் பிரிவில், உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்விடோலினா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

டுபாயில் இடம்பெற்ற டியூட்டி பிரீ சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப் பெண்கள் ஒற்றையர் இறுதி போட்டியில், உக்ரைனின் எலினா ஸ்விடோலினா மற்றும் டென்மார்க்கை சேர்ந்த கரோலினா வோஸ்னியாக்கி ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

இந்த போட்டியில், ஸ்விடோலினா 6-4, 6-2 என்ற நேர் செட்டில் முன்னாள் சாம்பியன் வோஸ்னியாக்கியை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

தன்னுடைய வெற்றி பற்றி கருத்து தெரிவித்த ஸ்விடோலினா கூறுகையில்,

'இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றால் தரவரிசையில் முதல் 10 இடத்திற்குள் நுழைவேன் என்பது தெரியும். இதுவே எனக்குள் கூடுதல் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இப்போது தான் நிம்மதி கிடைத்



துள்ளது. பெரிய போட்டித் தொடரில் நான் கைப்பற்றிய முதல் கோப்பை இதுவாகும். அந்த வகையில் இது எனக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்' என்று தெரிவித்துள்ளார்.





இரத்தினபுரி சர்வதேச விளையாட்டரங்கிற்கான அடிக்கல் நடும் விழா ஞாயிறன்று (26) காலை பாராளுமன்ற உப சபாநாயகரும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவருமான திலங்க சுமதிபால தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது சப்ரகமுவ மாகாணசபைத் தலைவர் காஞ்சன ஜயரத்ன, மாகாணசபை உறுப்பினர் யெஹியா எம்.இப்லார் மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டிருப்பதை படங்களில் காணலாம். (ஏ.ஏ.எம்.பாயிஸ்)

### தோனியின் அதிரடியால்

## ஆட்டங்கண்டது சத்தீஸ்கர் வெற்றியை ருசித்தது ஜார்கண்ட்

விஜய் ஹசாரே டிராபியில் தோனியின் அதிரடி துடுப்பாட்டத்தால், ஜார்கண்ட் அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

மாநில அணிகளுக்கு இடையிலான 50 ஓவர் கொண்ட விஜய் ஹசாரே ஒருநாள் கிரிக்கெட் தொடர் கொல்கத்தாவின் ஈடன் கார்டனில் நடைபெற்று வருகிறது.

ஞாயிற்றன்று நடைபெற்ற ஒரு லீக்கில் 'டி'பிரிவில் போட்டியில், டோனி தலைமையிலான ஜார்கண்ட் அணியும், சத்தீஸ்கர் அணியும் மோதின. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சத்தீஸ்கர் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஜார்கண்ட் அணி 57 ஓட்டங்களை பெற்றுக்கொள்வதற்குள் 6 விக்கெட்டுக்களை இழந்து திணற ஆரம்பித்தது. 7ஆவது விக்கெட்டுக்கு டோனியுடன், நதீம் ஜோடி சேர்ந்தார். டோனி 107 பந்துகளில் 129 ஓட்டங்களைக் குவித்து கடைசி பந்தில் ஆட்டம் இழந்தார். இதில் 10 பவுண்டரிகளும் 6 சிக்சர்களும் அடங்கும்.

டோனியின் சதத்தால் ஜார்கண்ட் அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 243 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பின்னர் 244 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய சத்தீஸ்கர் அணி, 38.4 ஓவர்களில் 165 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனை தொடர்ந்து தோனியின் அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. போட்டியில், வருண் ஆரோன், நதீம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.



## ஒருநாள் போட்டியில் நான்கு சதங்கள் நியூசிலாந்து வீராங்கனை சாதனை

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் வீராங்கனை எமி சட்டர்த்வைட் (amy satterth waite) ஒருநாள் போட்டியில் தொடர்ந்து நான்கு சதங்கள் அடித்து சாதனை படைத்துள்ளார்.

நியூசிலாந்து - அவுஸ்ரேலிய பெண்கள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி, ஆக்லாந்தில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 275 ஓட்டங்



களை பெற்றது. இந்த அணியின் ஆரம்ப வீராங்கனை பெத் மூனே, அணிக்காக 100 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

பின்னர் 276 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் நியூசிலாந்து அணி களமிறங்கியது. இதில் நியூசிலாந்து வீராங்கனை எமி, ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இதன் மூலம் நியூசிலாந்து அணி 49.1 ஓவர்களில் 276 ஓட்டங்களை பெற்று ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இப் போட்டியில் சதம் பெற்றதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக நான்கு சதம் அடித்த முதல் வீராங்கனை என்ற பெருமையை எமி பெற்றுள்ளார்.

இதற்கு முன் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட்டில் எமி தொடர்ச்சியாக 137 , 115 மற்றும் 123 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வில்பளையில் நடத்திய அரநாயக்க வலய பாடசாலை மாணவர்களுக்கான ஊடக கருத்தரங்கில் மௌலவி எஸ்.எல்.நௌபர் ஊடகவியலாளர்களான எம். ஏ. எம். நிலாம், அமீர் ஹுஸைன், எம்.பி.எம்.பைரூஸ், கலைவாதி கலீல், அதிபர் எம்.எம்.ஐ.எம். சாபிரின், ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்துகொண்ட அமைப்பின் முக்கியஸ்தர்களாகிய என்.எம்.அமீன், ரஷீட். எம்.ஹபீல், அஹமட் முனவ்வர், சாதிக் சிஹான், சித்திக் ஹனீபா மற்றும் திப்பிட்டிய உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் எம்.எம். எம்.ஏ.சப்ரி ஆகியோருடன் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் - எம்.எஸ்.எம்.ஸாகீர்)



திஹாரிய, மத்ரஸதுல் உம்முல் குரா மத்ரஸாவின் கலை நிகழ்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்றுமுன்தினம் திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலைய கேட்போர்கூடத்தில் நடைபெற்றபோது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக கலந்துகொண்டார். அதிபர் சனீரா உரையாற்றுவதையும், மாணவர்களது நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படுதல் மற்றும் பரிசு வழங்குதல் என்பவற்றை படங்களில் காணலாம்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 28TH FEBRUARY 2017